வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 01.07.2023 சனிக்கிழமை | இதழ் : 204 | பக்கங்கள் : 16




## மின்சாரக் கட்டணம் இன்று முதல் குறைப்பு

கொழும்பு, ஜூலை 01

இன்று சனிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின்சாரக் கட்டணத்தை 14.2 வீதத்தால் குறைக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி, வீட்டு மின் பாவனையில் பூச்சியம் முதல் 30 அலகு வரையிலான மாதாந்த நுகர்வு கொண்ட பிரிவுக்கு 65 சதவீத கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. ஓர் அலகு 30

11

## மீள்குடியேற்றப்படாத பகுதிகளுக்கு செல்ல நானும்கூட அனுமதி பெறவேண்டிய நிலை!

### மயிலிட்டியில் கூறினார் மைத்திரிபால

யாழ்ப்பாணம்,ஜூலை 01

மீள்குடியேற்றப்படாத பிரதேசங்களுக்கு நானும்கூட மேலதிக அனுமதியைப் பெற்றே செல்லவேண்டிய நிலையுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தெரிவித்துள்ளார்.

மயிலிட்டி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- உங்களுடைய காணி

11



# சீனா இலங்கையின் நம்பகமான நண்பன்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, ஜூலை 01

"அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் சீனா அதிகளவான முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. அதனுடன் பரஸ்பர நன்ஷமை பயக்கும் பங்காளித்துவத்தை விரிவுபடுத்துவதற்கு இலங்கை எதிர்பார்த்துள்ளது"

-இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

11

## பெற்றோலின் விலை ரூ. 10ஆல் எகிறியது

கொழும்பு, ஜூலை 01

இன்று சனிக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்டது.

புதிய விலைத் திருத்தத்தின்படி, 92 ஒக்ரைன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 328 ரூபாயாகும்.

95 ஒக்ரகைன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 20 ரூபாயால் குறைந்து 365 ரூபாயாக

11

## மாவையை சந்தித்தார் மைத்திரி

யாழ்ப்பானம், ஜூலை 01

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்று வெள்ளிக்கிழமை இரவு அவரது வீட்டில் சினேகபூர்வமாக சந்தித்து கலந்துரையாடினார்.

மூன்று நாள் பயணமாக யாழ்ப்பாணம் வருகை தந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

11



## எதிரணிகள் எதிர்க்க முடிவு

கொழும்பு, ஜூலை 01

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பான யோசனைக்கு எதிராக வாக்களிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா சபாகய, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை என்பனவே இந்த முடிவை எடுத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட மேலும் சில கட்சிகள் தமது நிலைப்பாட்டை இன்று அறிவிக்கவுள்ளன.

ஜனாதிபதி ரணில்

11

## யாழிலிருந்து கொழும்பு பயணித்த சொகுசு பஸ் நடு வீதியில் தீக்கிரை!

கொழும்பு, ஜூலை 01

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசுப் பயணிகள் பஸ் ஒன்று மதுரங்குளி கரிகெட்ட பகுதியில் நேற்று அதிகாலை திடீரென தீப்பிடித்து எரிந்ததில் அது முற்றாக எரிந்து நாசமானது.

இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான சொகுசுப் பயணிகள் போக்குவரத்துப் பஸ் ஒன்றே தீக்கிரையாகியுள்ளது.

இந்த பஸ் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில்



11

## புதிய பொலிஸ்மா அதிபர் நியமனத்தை நிதானத்துடன் மேற்கொள்ளவேண்டும்!

### ஜனாதிபதிக்கு பேராயர் மல்கம் கடிதம்

கொழும்பு, ஜூலை 01

"இலங்கையில் பொலிஸ்மா அதிபரின் வகிபாகம் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுதல், பொதுமக்களுக்குப் பாதுகாப்பை வழங்குதல் போன்ற பொறுப்புகளுடன் நேரடியாகத்

11

## பாராளுமன்றத்தில் இன்று கடன் மறுசீரமைப்பு விவாதம்

கொழும்பு, ஜூலை 01

உத்தேச உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம் இன்று சனிக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நேற்று கூடிய பாராளுமன்ற அலுவல்கள் குழு இதனை முடிவு செய்துள்ளது.

இன்று காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை விவாதம் நடைபெறும், மாலை 07.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும். நாளை ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்றம் கூடாதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# முல்லையில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ‘அஸ்வெசும’ இல்லை!

கொழும்பு, ஜூலை 01

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் முன்னெடுக்கப் படும் நலன்புரித் திட்டத்திற்கான நபர்களைத் தெரிவு செய்யும் போது தகுதியான பலர் துண்டிக்கப்பட்டுள்ளதாகக் கூறி நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டங்களில் முல்லைத்தீவு மாவட்டமும் இணைந்துள்ளது.

நம்பகமான புள்ளிவிவரங்களுக்கு அமைய, போரினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்களும் அந்த நன்மையை இழந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 23,901 பேர் மாத்திரமே சமுர்த்தி உதவித் தொகையை பெற்றுக்கொள்வதாகவும், ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட அஸ்வெசும நலன்புரி உதவித் திட்டத்திற்கு 16,211 பேர் மாத்திரமே தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 27ஆம் திகதி புதுக் குடியிருப்பு உடையார்கட்டு சமுர்த்தி வங்கியின் முன்பாக மூங்கிலாறு, உடையார்கட்டு, தேராவில் உள்ளிட்ட கிராம மக்கள் கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட் டத்தில் ஈடுபட்டு, புதிதாக தயாரிக்கப்பட்ட பட்டியலில் பயன்பெறத் தகுதி யானவர்களின் பெயர்கள் இடம்பெற வில்லை என வலியுறுத்தினர்.

நலத்திட்ட உதவிகளைப் பெறத் தகுதியுடைய அனைவருக்கும் அந்தச் சலுகைகளை வழங்குமாறு அவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போராட்டத்தை முன்னெடுத்த கிராம மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ். ஜெயகாந்த் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பதில் செயலாளர் கே.கனகேஸ்வரன் ஆகியோரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை கையளித்தனர்.

சிவில் சமூக செயற்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன், ஊடக வியலாளர்கள் மற்றும் போராட்டக் காரர்களுக்கு மகஜரின் உள்ளடக்கத்தை தெளிவுபடுத்தினார்.

மிகவும் வறிய மக்கள் வாழும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இத்திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 28ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஒன்று கூடிய முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிரதேச மக்களும் தமது பெயர்கள் புதிய பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக வலியுறுத்தியிருந்தனர்.

இராணுவத்தினரால் தமது காணிகளை பலவந்தமாக ஆக்கிரமித்துள்ளமையினால் வாழ்வாதாரத்தை இழந்த தமக்கு, நலன்புரி கொடுப்பனவு விடயத்திலும் பெயர்கள் உள்ளடக்கப்படாமை குறித்து கவலை வெளியிட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய முல்லைத தீவு மாவட்ட பதில் செயலாளர் கே.கனகேஸ்வரன், தகுதியானவர்கள் உத வித்திட்டத்தில் உள்வாங்கப்படுவார் கள் என உறுதியளித்தார். ஜூன் 10ஆம் திகதி வரை மீண்டும் மேன்முறையீடு செய்ய முடியுமென செயலாளர் அறிவித்தார்.

நலத்திட்ட உதவிகள் பெறத் தகுதியு டையவர்களின் பெயர்கள் நீக்கப்பட்ட தாகக் கூறி கடந்த சில நாட்களாக வடக்கு, கிழக்கு மாகா ணங்கள், மலையகம் உள்ளிட்ட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உதவி பெற தகுதியில்லாத ஒருவரின் பெயர் அல்லது குடும்பங்களின் விபரங்கள் இருந்தாலோ அது தொடர்பில் மேன்முறையீடு செய்யலாம் எனவும், ஜூலை 10ஆம் திகதி வரை மேன்முறை யீட்டை மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகம் மற்றும் கிராம மட்ட அரச அலுவலகங்களிலும் அந்தப் பிரதேசத்தின் நன்மைகளைப் பெறத் தகுதியானவர்களின் பெயர்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஒரு தனிநபர் அல்லது குடும்ப அலகு மேல்முறையீடு செய்ய இரண்டு வழிகள் கொடுக்கப்பட்டுள்ளன, அதில் முதலா வது நலன்புரி நன்மைகள் சபையின் www.wbb.gov.lk என்ற இணையதளத்தைப் பார்வையிடுவதன் மூலமாக மேற்கொள்ள முடியும்.

கையால் நிரப்பப்பட்டு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பிரதேச செயலகத்தில் ஒப்படைப்பது இரண்டாவது முறையாகும்.

அஸ்வெசும நலனைப் பெறத் தகுதியுள்ள ஒருவரும் ஆட்சேபனை தெரிவிக்கலாம் என்பதோடு அத்தகைய ஆட்சேபனைகளை அநாமதேயமாகச் சமர்ப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுத் தொடர்பில் எவருக்கேனும் பிரச்னைகள் காணப்படுமாயின் 1924 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெறலாம் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. (அ)

## யாழில் மக்களோடு மக்களாக அமர்ந்து மதிய உணவு சாப்பிட்டார் மைத்திரிபால



யாழ்ப்பாணம், ஜூலை 01

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா யாழ். நகரில் உள்ள சைவ உணவகமொன்றில் உணவருந்தி உள்ளார்.

மூன்று நாள் விஜயமாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மதியம் யாழ். நகரில் உள்ள சைவ உணவகம் ஒன்றில் மக்களுடன் மக்களாக அமர்ந்து சைவ உணவை உண்டார்.

தொடர்ந்து உணவகத்தில் உணவு உண்பதற்காக வருகை தந்தவர்களுடன் சினேகபூர்வமாக கலந்துரையாடியதுடன், முன்னாள் ஜனாதிபதியுடன் உணவகத்தில் நின்றவர்கள் புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் உடனிருந்தார். (அ)

## சுவீடனில் குர் ஆன் தீ வைப்பு; இலங்கை அரசு கடும் கண்டனம்

கொழும்பு, ஜூலை 01

உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களால் கொண்டாடப்படும் ஈத் அல் அதாவின் போது சுவீடனில் உள்ள மசூதிக்கு வெளியே இஸ்லாத்தின் புனித நூலான புனித குர்ஆன் எரிக்கப்பட்டதை இலங்கை கண்டித்தது.

சுவீடனில் வசிக்கும் ஈராக்கியர் என்று கூறப்படும் சல்வான் மோமிகா, புதன்கிழமையன்று ஸ்டாக்ஹோமின் மத்திய மசூதிக்கு வெளியே இஸ்லாத்தின் புனித நூலின் நகலை எரித்தார்.

இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சு தமது கண்டனத்தை தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம், மற்றவர்களின் உரிமைகளை மதிக்கும் வகையில் இந்த உரிமையைப் பயன்படுத்துவதற்கும், மதத்தின் அடிப்படையில் பிளவுகள் மற்றும் வெறுப்புகளை உருவாக்குவதற்கு உரிமம் வழங்காமல் இருப்பதை உறுதி செய்வதது பொறுப்பாகும்” என்று வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் நலன் கருதி, சமூகங்களுக்கு இடையில் துருவ முனைப்புக்கு வழிவகுக்கும் மத சகிப்புத்தன்மை மற்றும் வெறுப்பு நடவடிக்கைகளைத் தடுக்க அனைத்து நாடுகளும் தனிநபர்களும் கடமைப்பட்டுள்ளனர்” என்று இலங்கை வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## அரசாங்க தகவல் திணைக்களத்தின் முகநூல் பக்கம் ஹேக் செய்யப்பட்டது

கொழும்பு, ஜூலை 01

அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் நேற்று பிற்பகல் முதல் ஹேக்கர்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பான தொழில்நுட்ப மற்றும் சட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், இந்த உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்கள் மற்றும் செய்திகளை புதுப்பித்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தை அணுகும் பாவனையாளர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு பணிப்பாளர் நாயகம் வருத்தம் தெரிவித்தார்.

(அ)

## மனித எச்சங்கள் காணப்பட்ட பகுதியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்க உத்தரவு!

முல்லைத்தீவு, ஜூலை 01

முல்லைத்தீவில் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள பகுதியில், அடுத்த மாதம் 6ஆம் திகதி அகழ்வு பணிகளை முன்னனெடுக்க முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த தினம் வரையில், மனித எச்சங்கள் அழிவடையாமல் பாதுகாக்க, காவல்துறைக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக, நேற்று முன் தினம் மாலை கனரக இயந்திரம் கொண்டு நிலத்தினை தோண்டியபோது, மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன.

இதையடுத்து, கொக்கிளாய் காவல்துறைக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக நேற்று நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், இன்று பிற்பகல் 2.30 அளவில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது, அவர் குறித்த உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

பெண்களின் மேலாடை, பச்சை நிற சீருடை மற்றும் எலும்பு எச்சங்கள் என்பன இதன்போது இனம்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(அ)

## வங்குரோத்து நிலையிலிருந்து செப்ரெம்பருக்குள் நாடு மீளும்

ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 01

இலங்கை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில், வங்குரோத்து நிலையிலிருந்து மீளும் என, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை பணிப்பாளர் நிறுவனத்தின், வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோது, அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட அரசாங்கத்தின் முயற்சிகளுக்கான கூட்டு ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

வார இதழ்
ஈழநாடு
Eelanadu
01.07.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## டக்ளஸ் என்ன கூறுகின்றார்?

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் நடவடிக்கைகளில் தான் ஈடுபட்டுள்ளார் எனவும் தமிழ் கட்சிகள் அதற்கு ஒத்துழைப்பு வழங்காமல் பிரச்னைகள் தொடர்வதையே விரும்புகின்றன என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். அரசாங்கத்தின் அங்கமாக இருக்கும் ஒருவர் அரசாங்கத்தை நியாயப்படுத்துவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. மகிந்த ராஜபக்ஷ '13 பிளஸ்' என்று கூறி தமிழர் பிரச்னையை தட்டிக்கழித்த போதும் டக்ளஸ் தமிழ் கட்சிகளையே குற்றஞ்சாட்டினார். கோட்டாபய ராஜபக்ஷ 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டபோதும் டக்ளஸ் தமிழ் கட்சிகள்மீதே குற்றஞ்சாட்டியிருந்தார். இப்போது ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப்போகிறார் என்றும் அதற்கு தமிழ் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும் கூறுகின்றார்.

அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப் போவதாக ரணில்தான் கூறினார். அதன் பின்னர் தமிழ் கட்சிகளோடு சில சுற்று பேச்சுகளில் ஈடுபட்டார். ஆனால், ரணில் கூறியது போன்று, அதில் முன்னேற்றங்களை அவர் இதுவரையில் நிரூபிக்கவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்துக்கு தமிழ் கட்சிகளின் சம்மதம் அவசியமற்றது. ஒருவேளை அது தேவையென்றாலும்கூட, 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில், இந்திய எதிர்ப்பு கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸை தவிர, ஏனைய பிரதான தமிழ் கட்சிகள் எவையுமே எதிர்ப்பு வெளியிடவில்லை. இந்த நிலையில் தமிழ் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லையென்று கூறுவது பொருத்தமற்றது.

டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி பல தசாப்தங்களாக அரசாங்கங்களின் பங்காளியாக செயல்பட்டு வருகின்றது. குறிப்பாக இறுதி யுத்தத்தின்போது, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அங்கம் வகித்தது. மகிந்த ராஜபக்ஷ பல்வேறு சந்தர்ப்பங்களில் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பிலும் அதற்கப்பால், செல்வது தொடர்பிலும் பேசியிருந்தார். இந்தியாவுக்கும் அவ்வாறான வாக்குறுதியை வழங்கியிருந்தார். ஆனால், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்த டக்ளஸ் தேவானந்தா இந்த விடயத்தில் எவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுத்தார்? இதற்காக உள்ளுக்குள் எவ்வாறான அழுத்தங்களை ஏற்படுத்தினார்?

டக்ளஸ் தேவானந்தா ஓர் அமைச்சராக இருந்ததன் மூலம் அவரின் அமைச்சின் எல்லைக்குட்பட்டு சில விடயங்களை முன்னெடுத்திருக்கலாம். அவை அமைச்சர்கள் பலரும் செய்கின்ற பணிகள்தான். ஆனால், அரசியல் தீர்வு விடயத்தில் எந்தவொரு முன்னேற்றத்துக்காகவும் டக்ளஸ் செயல்பட்டமைக்கு சான்றுகள் இல்லை. அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசிய கட்சிகளே பிரதான பங்கை வகித்திருக்கின்றன. ஆனால், சில சந்தர்ப்பங்களை அவர்கள் சரியாகக் கையாளவில்லை என்பதில் உண்மை இல்லாமல் இல்லை.

குறிப்பாக, 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, மாகாண சபை முறைமையைப் பலப்படுத்துவதன் ஊடாக முன்னோக்கி பயணித்திருக்க முடியும். அதற்கு பதிலாக புதிய அரசியல் யாப்பு விடயத்தில் கூட்டமைப்பு காலத்தை விரயம் செய்தது. ஆனால், இந்த விடயத்தை முதன்மைப்படுத்தி அரசாங்கத்தின் அங்கமாக இருக்கின்ற ஒரு கட்சி தமிழ் கட்சிகள் மீது குற்றம்சாட்டிவிட முடியாது. ஏனெனில், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் அரசாங்கத்தின் அங்கமாக இருக்கின்றபோது உச்சபட்சமான அழுத்தங்களை பிரயோகித்து அது முடியாத போது - அதற்காக அரசாங்கத்திலிருந்து வெளியேறியிருந்தால் அவரின் குற்றச்சாட்டுகளுக்கு அர்த்தம் இருக்க முடியும்.

### உள்ளூர் கடன் மறுசீரமைப்பு:

## அரசின் கோரிக்கையை எவரும் மறுக்க முடியாது!

### விக்னேஸ்வரன் எம். பி. தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஜூலை 01*

உள்ளூர் கடன்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்ற அரசாங்கத்தின் கோரிக்கையை எவரும் மறுக்கமுடியாது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் அவரின் இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உள்ளூர் கடன் மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் மக்களை குழப்புவதற்காக வங்கி கணக்குகளில் உள்ள பணத்தை மக்கள் எடுக்க முடியாது என்று பொய்ப் பிரசாரம் செய்கின்றனர்.

மக்கள் வங்கியின் ஆளுநர் இது தொடர்பான முழு விளக்கத்தையும் வெளியிட்டுள்ளார். தேர்தலை எதிர்பார்த்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த காலப்பகுதியில் மக்களுக்கு அநீதியை ஏற்படுத்துவார் என்று நான் நம்பவில்லை. எனவே, இது வெறுமனே எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவிக்கவேண்டும் என்பதற்காக இவ்வாறு மக்களை பயமுறுத்துகின்றன - என்றார். (ஐ)

## தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள கட்சிகள் பேச்சளவிலேயே தேசியம் பேசுகின்றன!

### ஜனநாயக போராளிகள் கட்சி

*யாழ்ப்பாணம், ஜூலை 01*

கனடிய அரசாங்கத்துக்கு எதிராக வடக்கில் சிறிய குழு ஒன்று எதிர்ப்பு தெரிவித்த தற்கு தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள கட்சிகள் எவையும் கண்டனம் தெரிவிக்கவில்லை. அவ்வாறான கட்சிகள் பேச்சளவிலேயே தேசியம் பேசிவருகின்றன என்று ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ. கதிர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு ஈழத்தில் நடைபெற்றது இனப்படு கொலை என்பதை சான்று களுடன் கனடாவின் பாராளு மன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. நீதியை நிலைநாட்ட கனடா பிரதமர் எடுத்த தீர்மானத்தை நாம் வரவேற்பதுடன் அவருக்கு நன்றிகளையும் தெரிவித்து கொள்கின்றோம்.

இதனை தமிழினத்துக் கான அங்கீகாரமாக பார்க்கின்றோம். கடந்த ஜூன் 24 ஆம் திகதி வவுனியாவில் இலங்கை அரச படைகளின் ஊதுகுழல்களாக செயல்படுகின்ற - எமது இனத்தை சேர்ந்தவர்கள் கேவலமான துரோகத்தை செய்துள்ளனர்.

அரசாங்கத்தால் நடத்தப்பட்ட இனப்படுகொலையை நடக்காதது போன்று மக்கள் மத்தியில் கொண்டு வருவதும், கனடா அரசாங்கத்துக்கும் கனடா பிரதமருக்கும் பாராளுமன்ற உறுப்பினருக்கும் எதிராக கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து தமிழ் தேசியம் பேசும் ஏனைய அரசியல் கட்சிகளோ, தீவிர தமிழ் தேசியம் பேசும் அரசியல் தலைவர்களோ எதிர்ப்புகளை வெளியிடவில்லை. இதன் மூலம் அவர்களின் செயல்பாடுகள் அரசாங்கத்துக்கு ஆதரவானவே உள்ளதுடன் வெறும் பேச்சுகள் மட்டுமே தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி நிற்கின்றன. ஆகவே, மக்கள் இவ்வாறானவர்களை நன்கு அவதானித்து பார்க்க வேண்டும் -என்றார். (ஐ)

## இசைவேள்வி இன்றைய நிகழ்வு

*யாழ்ப்பாணம், ஜூலை 01*

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் 'சிறீ ராம நாம கானாமிர்தம்' இசை வேள்வி கடந்த வியாழக் கிழமை முதல் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக் கிழமை மாலை 5 மணிக்கு சங்கீத வித்வான் ஏ. கே. கருணாகரன் நினைவரங்காக நிகழ்வுகள் நடைபெறவுள் ளன. யாழ். போதனா மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் சி. சிவன்சுதனின் தலைமையுரையைத் தொடர்ந்து இசையரங்கு நடைபெறும்.

இதில், அணி செய் கலைஞர்களாக திருமதி சுகன்யா அரவிந்தன் (பாட்டு), அ. ஜெயராமன் (வயலின்) ம. லோகேந்திரன் (மிருதங்கம்), வி. ராகவன் (கஞ்சிரா) பங்கேற்பர்.

அடுத்து நடக்கும் இசைப் பேரரங்கு நிகழ்வில் அணி செய் கலைஞர்களாக தமிழ் நாட்டை சேர்ந்த சங்கீத கலாநிதி சிறீமதி எஸ். சௌமியா (பாட்டு), வி. எஸ். கோகுல் (வயலின்), டில்லி எஸ். சாய்ராம் (மிருதங்கம்), எஸ். கிருஷ்ணா (கடம்) ஆகியோர் பங்கேற்பர்.(ஐ)

## பச்சை மிளகாய் விலை உயர்ந்தது


*கொழும்பு, ஜூலை 01*

மரக்கறி சந்தைகளில் ஒரு கிலோ பச்சை மிளகாயின் சில்லறை விலை ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாயின் மொத்த விலையும் 800 முதல் 900 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாக பொருளாதார மத்திய நிலையத் தகவல் கூறுகிறது.

கடந்த வாரங்களில் ஒரு கிலோ பச்சை மிளகாய் 350 முதல் 500 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது. சந்தைக்கு வரும் பச்சை மிளகாயின் அளவு பெருமளவில் குறைந்துள்ளமையால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். அத்துடன், எதிர்வரும் வாரத்தில் மேலும் விலை அதிகரிக்கலாம் என்றும் தெரிவித்தனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 01 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 16
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரையோதசி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உடல்நலம் பாதிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். எதிர்பாராத நன்மை உண்டாகும் நாள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போனகாரியங்கள் முடியும். தொழிலில் இலாபம் அதிகரிக்கும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புத்துணர்ச்சி பெருகும்.

**விருட்சிகம்**
இராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள் உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். விழிப்புடன் செயல்படவேண்டிய நாள்.

**தனுசு**
எதிலும் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
இராஜதந்திரமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். இனிமையான நாள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். ஊழியர்களின் ஆதரவு கிட்டும். வெற்றி பெறும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். நிம்மதி உண்டு. உற்சாகமான நாள்.

# இறுதிப் போரில் இலங்கைக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவளித்தது

## பா. ஜ. கவே தமிழருக்கு துணை என்கிறார் அண்ணாமலை

சென்னை, ஜூலை 01

இறுதி யுத்தத்தின்போது இலங்கைக்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சி செயல்பட்டது. ஆனால், பா. ஜ. க. இலங்கை தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கிறது என்று பா. ஜ. கவின் தமிழக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறையில் நேற்று பிரசாரக் கூட்டம் ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“மயிலாடுதுறை மண்ணின் பெருமையை செங்கோல் மூலம் பிரதமர் இந்தியா முழுவதும் எடுத்துச் சென்றுள்ளார். தற்போது புதிய பாராளுமன்றத்தில் செங்கோலை திருவாசகம் கோளறு பதிகம் தேவாரத்தோடு பிரதமர் பாராளுமன்றத்தில் நிறுவி மயிலாடுதுறை மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளார். மயிலாடுதுறை மண்ணில் உள்ள திருவாடுதுறை ஆதீனத்திலி



ருந்து தரப்பட்ட செங்கோலை சாட்சியாக கொண்டு மூன்றாவது முறையாக நரேந்திர மோடி ஆட்சி அமைப்பார்.

2009 ஆம் ஆண்டு ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு போர் தொடுத்த போது இலங்கை அரசுக்கு ஆதரவாக நின்றது காங்கிரஸ் கட்சி. 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஈழத் தமிழருடன் தோளோடு தோள் நின்று, இன்று அவர்கள் எந்த பிரச்னையும் இல்லாமல் இருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் பிரதமர் மோடிதான். ஈழம் நன்றாக இருந்தபோது ஈழத்துக்கும் பூம்புகாருக்கும் இடையே தொடர்பு இருந்தது அந்த தொடர்பு மீண்டும் வளர வேண்டும் என்பது நரேந்திர மோடியின் எண்ணம்.

பாட்னாவில் நடந்த கூட்டத்தின் முடிவில் பத்திரிகையாளர்களை சந்திக்காமல் பின் வாசல் வழியாக ஓடிச் சென்றவர் மு க ஸ்டாலின். அமைச்சர் செந்தில் பாலாஜி அமுலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போது அவரை முதல் ஆளாக சென்று சந்தித்தது தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் தான். அரசு மருத்துவமனையில் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு சிகிச்சை வழங்காமல் தனியார் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

(ஐ)

# செந்தில் பாலாஜியின் பதவி நீக்கம் இடைநிறுத்தப்பட்டதாக அறிவிப்பு

சென்னை, ஜூலை 01

அமைச்சர் பதவியில் இருந்து செந்தில் பாலாஜி நீக்கப்படுகிறார் என்று நேற்று முன்தினம் இரவு அறிவிக்கப்பட்ட நிலையில், அடுத்த சில மணி நேரங்களில் அந்த நடவடிக்கை நிறுத்திவைக்கப்படுவதாக ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பதவியில் இருந்து செந்தில் பாலாஜி நீக்கப்படுவதாக ஆளுநர் மாளிகையில் இருந்து நேற்று முன்தினம் இரவு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில், “அமைச்சர் செந்தில் பாலாஜி, வேலை வாங்கி தருவதாக பணமோசடி செய்தது உள்ளிட்ட பல்வேறு ஊழல் வழக்குகளில், கடுமையான குற்றவியல் வழக்குகளை எதிர்கொண்டுள்ளார். அமைச்சர் பதவியை தவறாக பயன்படுத்தி, தன் மீதான விசாரணைக்கும் அவர் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறார். தற்போது நீதிமன்ற காவலில் அமுலாக்கத் துறை விசாரணையில் உள்ளார். அதுமட்டுமில்லாமல், தமிழக காவல் துறையிலும் அவர் மீது சில வழக்குகள் உள்ளன. இதனால் செந்தில் பாலாஜி அமைச்சரவையில் தொடர்ந்தால் அரசு இயந்திரத்தின் செயல்பாடு பாதிக்கப்படும். எனவே, உடனடியாக அவரை அமைச்சரவையில் இருந்து ஆளுநர் ஆர். என். ரவி நீக்கியுள்ளார்” என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்தார். “அமைச்சரை நீக்கும் அதிகாரம் ஆளுநருக்குக் கிடையாது. சட்ட ரீதியாக இதனை நாங்கள் சந்திப்போம்” என்று முதல்வர் தெரிவித்திருந்தார். தி.மு.க கூட்டணியில் உள்ள கட்சிகள் பலவும் ஆளுநரின் நடவடிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்தன.

இந்நிலையில், அமைச்சர் பதவியில் இருந்து செந்தில் பாலாஜி நீக்கப்படுகிறாரென அறிவிக்கப்பட்ட சில மணி நேரங் களில் அந்த நடவடிக்கை நிறுத் திவைக்கப்படுவதாக ஆளுநர் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு ஆளுநர் அனுப்பி உள்ள கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

(ஐ)

# இராமநாதபுரத்தில் தீவிரவாத தடுப்பு பாதுகாப்பு ஒத்திகை!

## 16 பேர் வெடிகுண்டுகளுடன் கைது

இராமேஸ்வரம், ஜூலை 01

இராமநாதபுரத்தில் நேற்று முன்திம் வெடிகுண்டுகளுடன் 16 பேர் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில், அங்கு இரு நாட்களாக தீவிரவாத தடுப்பு பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட காவல் துறையின் சார்பில் கடலோர மாவட்டங்களில் சாகர் கவாச் என்னும் தீவிரவாத தடுப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்திகை நேற்று இரண்டாவது நாளாக நடந்தது.

கடல் வழியாக தீவிரவாதிகள் ஊடுருவலை தடுக்கவும் மீண்டும் மும்பை தாக்குதல் போன்ற நிகழ்ந்து விடாமல் தடுக்கவுமே இந்த ஒத்திகை நடத்தப்பட்டது.

நேற்று காலை 6 மணிக்கு தொடக்கம் ஒத்திகை நடந்தது.

இதே வேளை நேற்று முன்தினம் நடந்த ஒத்திகையில் இராமேஸ்வரத்தில் வெடி குண்டுகளுடன் வந்த 16 பேரை மடக்கி பிடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

பாதுகாப்பு ஒத்திகையை முன்னிட்டு ராமேசுவரம், பாம்பன், தங்கச்சிமடம், மண்டபம், தொண்டி, தேவிபட்டினம், கீழக்கரை, ஏர்வாடி, சாயல்குடி உள்ளிட்ட கடலோர பகுதி முழுவதையும் பொலிஸார் தங்களின் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வந்துள்ளனர்.

கடலோரத்தில் வாழும் மீனவர்களுக்கு சந்தேகத்திற்குரிய நபர்கள் யாரும் தென்பட்டால் உடனடியாக தெரிவிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது.

(ஐ)

# எதிர்க்கட்சியினருக்கு ரணில் மீது பொறாமை

## இராஜாங்க அமைச்சர் டயனா கமகே

கொழும்பு, ஜூலை 01

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீதுள்ள பொறாமை காரணமாகவே எதிர்க்கட்சிகள் கடன் மறுசீரமைக்கப்படுவதை எதிர்ப்பதாகவும் நாட்டின்மீதுள்ள பற்றுக் காரணமாக அல்ல எனவும் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சிகள் பொய்யான பூச்சாண்டியை உருவகித்து காட்டி நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ள முயற்சித்து வருகின்றன.

இலங்கையை கட்டியெழுப்பக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதை தற்போது முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இதனால், ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை சீர்குலைத்து, நாட்டை மீண்டும் வங்குரோத்து அடைந்த நாடாக மாற்ற எதிர்க்கட்சிகள் தருணம் பார்த்துக் காத்துள்ளன.

ஜனாதிபதி மிகவும் கடினமான பயணத்தை மேற்கொண்டுள்ளார். கடனை மறுசீரமைக்கவில்லை என்றால், நாம் மீண்டும் வரிசைகளில் நின்று, எரிபொருள், எரிவாயுவை கொள்வனவு செய்யும் நிலைமை ஏற்படும்.




மீண்டும் அந்த யுகத்தை நோக்கிச் செல்ல மக்கள் விரும்பவில்லை.

எனினும் மீண்டும் அந்த யுகத்தை நோக்கி நாட்டை கொண்டு செல்ல வேண்டும் என்ற தேவையே எதிர்க்கட்சிக்கு இருக்கின்றது-என்றார். (அ)

# இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்தார் செந்தில் தொண்டமான்



கொழும்பு, ஜூலை 014

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்து பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்தமை சிறப்பான விடயம். எங்களின் அபிவிருத்தி கூட்டாண்மை குறித்து ஆராய்ந்தோம். எதிர்கால ஒத்துழைப்பிற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்தோம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது ருவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எங்கள் அயல் நாடுகளுக்கு முதலிடம் என்ற கொள்கையில் இலங்கை முக்கியமான இடத்தில் உள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# நாட்டில் இருந்த ஒரேயொரு குழந்தை கதிரியக்க நிபுணரும் வெளியேறினார்

கொழும்பு, ஜூலை 01

குழந்தை கதிரியக்கவியல் தொடர்பான இலங்கையின் ஒரேயொரு மருத்துவ நிபுணர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக விசேட வைத்தியர்கள் சங்கத்தின் வைத்தியர் அசோக குணரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுக்குள் சுகாதாரத்துறைக்கு குறைந்தது 4,000 நிபுணத்துவ மருத்துவர்கள் தேவைப்படுவார்கள் என முன்னர் மதிப்பிடப்பட்டது.

தற்போது, எங்களிடம் 50 சதவீதம் மட்டுமே உள்ளது. விசேட மருத்துவர்களின் ஓய்வு வயதை 60 ஆக நிர்ணயம் செய்யும் அரசாங்கத்தின் முடிவால், மீதமுள்ள 50 சதவீதத்தில் இருந்து சுமார் 250 மருத்துவர்கள் இத்துறைக்கு இழக்கப்படுவார்கள். அவசர சிகிச்சைப் பிரிவுகளில் இணைக்கப்பட்ட 30 மருத்துவர்களுக்கு நாங்கள் பயிற்சி அளித்து விசேட மருத்துவர்களாக நியமித்தோம். ஆனால் அவர்களில் 20 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

2024 மற்றும் 2025 ஆம் ஆண்டில் மொத்தம் 289 மயக்க மருந்து நிபுணர்கள் இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு 155 பேர் மட்டுமே உள்ளனர், அவர்களில் 30 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

மீதமுள்ள மயக்க மருந்து நிபுணர்கள் 60 வயதில் ஓய்வு பெற்றால், சுகாதாரத்துறை மேலும் 20 மயக்க மருந்து நிபுணர்களை இழக்கும்.புலம்பெயர்ந்த பிறகு இந்த ஆண்டு இறுதிக்குள் 100 விசேட மருத்துவர்கள் மற்றும் மயக்க மருந்து நிபுணர்கள் மட்டுமே இருப்பார்கள் என கூறுவது துரதிர்ஷ்டவசமானது. நாட்டில் குழந்தை கதிரியக்க மருத்துவத்தில் ஒரே ஒரு நிபுணர் மட்டுமே இருந்தார். அவர் ஏற்கனவே இடம்பெயர்ந்தார். விசேட மருத்துவர்கள் குறைந்த வசதிகளைப் பெறுவதால் முதுகலை படிப்பைத் தொடரவில்லை.

எனவே, மருத்துவர்கள் இடம்பெயர்வதை நிறுத்த வேண்டுமானால், அரசாங்கம் இந்தப் பிரச்னைகளை கவனிக்க வேண்டும்-என்றார். (அ)

# வட பகுதியில் மீண்டும் தலைதூக்கும் மலேரியா!

இலங்கையில் மீண்டும் மலேரியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மலேரியா எதிர்ப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

மலேரியா ஒழிக்கப்பட்ட நாடாக இலங்கை அறியப்பட்டாலும் நாட்டில் மீண்டும் மலேரியா பரவும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் கல்முனைப் பிரதேசங்களில் மலேரியா நோய்க்கிருமியான அனோபிலஸ் ஸ்டெபன்ஸி அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் ஜீவனி ஹரிஷ்சந்திர தெரிவித்தார்.

இந்த நுளம்புகளை ஒழிப்பதற்காக நாடு முழுவதும் பூச்சியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே மக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார். (அ)

# ஓட்டோ விபத்தில் மாணவர்கள் காயம்!

கொழும்பு, ஜூலை 01

பண்டாரவளை-கொஸ்லந்த பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொஸ்லந்த பகுதியில் பயணித்த ஓட்டோ 20 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் 4 மாணவர்கள் காயமடைந்து கொஸ்லந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்த பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ரணிலே ஜனாதிபதி வேட்பாளர்! மாற்றுக் கருத்துக்கு இடமில்லை

## அமைச்சர் காஞ்சன திட்டவட்டம்




கொழும்பு, ஜூலை 01

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறங்கியே தீருவார். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.”

-இவ்வாறு அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் மொட்டுக் கட்சி சார்பாகவா அல்லது பொதுவேட்பாளராகவா போட்டியிடுவார் என்பதை ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளிவந்த பின்னர்தான் அறியத்தருவோம்.

நாட்டிலுள்ள தற்போதைய அரசியல் தலைவர்களில் நாட்டுக்குத் தலைமை தாங்கக்கூடிய சிறந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. இதை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பறைசாற்றிக் காட்டும்-என்றார். (அ)

# மூன்று வாகன விபத்துக்களில் 5 வயது சிறுமி உட்பட மூவர் பலி!

கொழும்பு, ஜூலை 01

வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் சிறுமி உட்பட மூவர் உயிரிழந்த என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தளம், பிடிகல, கிண்ணியா ஆகிய பகுதிகளில் இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

கிண்ணியா பகுதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து தடுப்பில் மோதியதில் 5 வயதுச் சிறுமி உயிரிழந்தார்

விபத்தின்போது விபத்தில் உயிரிழந்த சிறுமி, தந்தை, தாய் மற்றும் மற்றுமொரு குழந்தை மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளதுடன், சாரதியான தந்தை காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, புத்தளம் வீதியின் இடது பக்கத்திலிருந்து வீதியின் வலது பக்கமாகத் திரும்ப முற்பட்ட போது அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் 48 வயதுடைய சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, பிடிகல பிரதேசத்தில் பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவர் அதே பஸ்ஸின் பின் சக்கரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். சித்திரகொட, அமுகொட பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். (அ)

# உடுப்பிட்டியில் மைத்திரிபால பங்கேற்ற நிகழ்வில் வழங்கப்படவிருந்த காலாவதியான குளிர்பானம்!

யாழ்ப்பாணம், ஜூலை 01

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டிருந்த நிகழ்வுக்காக கொள்வனவு செய்யப்பட்ட குளிர்பானம் காலாவதியானமை பாதுகாப்பு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் விளையாட்டு மைதானம் ஒன்றுக்கான நிதி உதவி வழங்கியமையை ஒட்டிய நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட தேநீர் விருந்துக்காக உடுப்பிட்டியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் 4 குளிர்பானப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதனை பாதுகாப்புப் பிரிவினர் பரிசோதித்தபோது அது காலாவதியானமை கண்டுபிடிக்கப்பட்டது. (அ)

# "போர்க்காலத்தில்கூட ஞாயிறு பாராளுமன்றம் கூடியதில்லை"

கொழும்பு, ஜூலை 01

**நாட்டில் போர் நடைபெற்ற காலத்தில்கூட ஞாயிற்றுக்கிழமைகளில் பாராளுமன்றம் கூட்டப்படவில்லை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.**



போர்க்காலத்தில்கூட வார இறுதி நாட்களில் பாராளுமன்றத்தை அவசரமாகக் கூட்டியதில்லை.

மக்களின் பிரச்னைகளைப் புரிந்துகொள்ளாது, ஒரு நபரின் தேவைக்கு அமைந்து இது நடக்கின்றது என்பது தெளிவாகியுள்ளது.

அவசரமாக வங்கிகளுக்கு 5 நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. வரலாற்றில் எப்போதும் ஞாயிற்றுக் கிழமைகளில் பாராளுமன்றம் கூட்டப்பட்டதில்லை.

வரவு-செலவுத்திட்ட விவாதங்களின்போது, மிக அரிதாக சனிக்கிழமை பாராளுமன்றம் கூடும். பிரித்தானிய பாராளுமன்றம் கூட ஞாயிற்றுக்கிழமைகளில் கூடியதில்லை.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தி மக்களின் வறுமையை அதிகரித்து வருகிறது.

மக்களின் பிரச்னைகளுக்கு ஓரளவுக்கு பாதுகாப்பை வழங்கிய சமூக நிவாரணங்களையும் அரசாங்கம் படிப்படியாக இல்லாமல் ஆக்கி வருகிறது-என்றார். (அ)

# பஸ் கட்டணத்தில் மாற்றம் இல்லை!



கொழும்பு, ஜூலை 01

பஸ் கட்டணங்களில் எவ்வித திருத்தங்களையும் மேற்கொள்ளாதிருக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சஷி வெல்கம இதனை தெரிவித்தார்.

இதற்கமைய, குறைந்தபட்ச கட்டணமான 30 ரூபா தொடர்ந்தும் அவ்வாறே பேணப்படவுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன், ஜூலை முதலாம் திகதி முதல் ஏனைய கட்டணங்களிலும் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு அகில இலங்கை பஸ் உரிமையாளர்கள் சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

பஸ் கட்டண திருத்தக் கொள்கைக்கு அமைய, ஜூலை முதல் தமக்கான கட்டணத் திருத்தம் அமுல்படுத்தப்படவேண்டும் என சங்கத்தின் பிரதான செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் வலியுறுத்தியுள்ளார். (அ)

# இளைஞனை கடத்த முயற்சித்த இராணுவ சிப்பாய் பிடிபட்டார்!

கொழும்பு, ஜூலை 01

பொலிஸ் அதிகாரிகள் போல் நடித்து, 23 வயதான இளைஞனை ஓட்டோவில் கடத்திச் செல்ல முயற்சித்த இராணுவ சிப்பாய் உட்பட இரண்டு பேரை தாம் கைது செய்துள்ளதாக புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்திச் செல்லப்பட்ட இளைஞனையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கொஸ்கொட பிரதேசத்தை சேர்ந்த இளைஞனே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன் புறக்கோட்டை பஸ்ரியன் மாவத்தை வழியாக நடந்து சென்றுக் கொண்டிருந்தபோது, ஓட்டோவில் வந்த இரண்டு பேர் தம்மை பொலிஸ் அதிகாரிகள் எனக் கூறி, போதைப் பொருள் இருக்கின்றதா என்பதைப் பரிசோதிக்க பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லவேண்டும் என பலவந்தமாக அவரை ஓட்டோவில் ஏற்றி கடத்திச் சென்றுள்ளனர்.

அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், சம்பவத்தை பார்த்து உடனடியாகச் செயற்பட்டு ஓட்டோவை நிறுத்தி, இளைஞனை மீட்டதுடன் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள 38 வயதான இராணுவ சிப்பாய், பனாகொடை இராணுவ முகாமில் கடமையாற்றுபவர் எனவும் மற்றைய நபர் 28 வயதான கொழும்பு 10 சங்கராஜ மாவத்தையைச் சேர்ந்தவர் எனவும் புறக்கோட்டை பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் எந்த காரணத்திற்காக இளைஞனை கடத்திச் செல்ல முயற்சித்தனர் என்பதை கண்டறிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இலங்கைக்கு போதைப்பொருள் கடத்திய வெளிநாட்டவர்கள் ஆழ்கடலில் சிக்கினர்!

கொழும்பு, ஜூலை 01

இலங்கையின் தெற்கே சுமார் 573 கடல் மைல் (சுமார் 1,061 கி.மீ) தொலைவில் இலங்கை கடற்படையினர் நடத்திய சிறப்பு நடவடிக்கையின் மூலம் ரூ.18.5 மில்லியன் மதிப்புள்ள ஹெரோயினுடன் ஒரு வெளிநாட்டு இழுவைப் படகு தடுத்து நிறுத்தப்பட்டது.

போதைப்பொருள் ஏற்றிச் சென்ற இழுவை படகில் இருந்த எட்டு வெளிநாட்டுப் பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இழுவைப்படகின் மூலம் பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு பெருமளவிலான ஹெரோயின் போதைப்பொருள் கொண்டு வரப்பட்டதாகவும், கடற்படைக் கப்பல்கள் நெருங்கும்போது ஹெரோயின் கடலில் வீசப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இழுவைப் படகுடன் சந்தேக நபர்கள் ஜூன் 28 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டனர்.

கடற்படை புலனாய்வு, அரச புலனாய்வு சேவை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் இணைந்து நடத்திய ஒருங்கிணைந்த புலனாய்வு நடவடிக்கையின் மூலம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், இந்த நடவடிக்கை இலங்கை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டது.

ஜூன் 21 அன்று சந்தேகத்திற்கிடமான வெளிநாட்டு இழுவை படகைக் கண்டறிந்த பின்னர் இலங்கை கடற்படையின் சயுர ஆட்கடல் ரோந்துக் கப்பல் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

மேலதிக தேடுதலின்போது, படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 926 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை கடற்படையினர் மீட்டுள்ளனர். இதன்படி, போதைப்பொருள் கடத்திய இழுவைப் படகுடன் எட்டு வெளிநாட்டுப் பிரஜைகள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்த மதிப்பு சுமார் 18.5 மில்லியன் ரூபா என நம்பப்படுகிறது.

இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 17 முதல் 42 வயதுக்குட்பட்ட ஈரான் மற்றும் பாகிஸ்தான் பிரஜைகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (அ)

### மனைவியை கொல்லவே தப்பினேன்!

# சிறைக்காவலர் சீருடை அணிந்து தப்பிச்செல்ல முயன்ற கைதி தகவல்

கொழும்பு, ஜூலை 01

சிறைக்காவலர் அணியும் சீருடையை அணிந்துகொண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து தப்பியோடிய மரண தண்டனை கைதி, தனது மனைவியை கொலை செய்யும் நோக்கத்துடனேனே தப்பிச் சென்றதாக விசாரணையின்போது வாக்குமூலம் அளித்துள்ளார்.

சிறைச்சாலை காவலர் சீருடை இந்த கைதிக்கு சிறைச்சாலையில் தையல் அணியில் பணிபுரியும் மற்றொரு கைதியால் வழங்கப்பட்டதும் தெரியவந்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்ற மரண தண்டனைக் கைதியிடம் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக நேற்று முன் தினம் பூசா சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலை விசாரணைக் குழுவினரின் விசாரணைகளின்போதே கைதி இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையின் தையல் குழுவைச் சேர்ந்த மற்றுமொரு கைதியே அவருக்குச் சிறைச்சாலை காவலர் சீருடை தைத்து கொடுத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மனைவியை கொல்லவேண்டுமென்ற வெறியில் வெலிக்கடை சிறைச்சாலையை விட்டு வெளியேறினாலும், அதன் பின்னர் என்ன செய்யப்போகிறார், எங்கு செல்வது என்பது குறித்து உறுதியான முடிவு எடுக்கவில்லை என அவர் கூறியுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறைக்காவலர் சீருடை அணிந்து கொண்டு சிறைச்சாலையின் பிரதான வாயில் ஊடாக வெளியேறிய இந்த கைதி மருதானை புகையிரத நிலையத்தில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டார்.

இந்த கைதிக்கு 2015 ஆம் ஆண்டு கம்பஹா மேல் நீதிமன்றத்தால் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அவர் சுமார் 42 வயதுடையவர் என்றும் பன்னல, உலகொடுவெல்ல பிரதேசத்தில் வசித்து வந்தவர் என்றும் சிறைச்சாலை ஆவணங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு குறித்து இன்னமும் தெளிவுபடுத்தப்படவில்லை

### கூறுகிறார் அங்கஜன் இராமநாதன்

கொழும்பு, ஜூலை 01

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு உள்ளடக்கம் தொடர்பாக எமக்கு இன்னமும் தெளிவுபடுத்தப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மொஹிதீன் ஜும்மா பெரிய பள்ளி வாசலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட குழுவினர் விஜயம் செய்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு உள்ளடக்கம் தொடர்பாக நாடாளுமன்றம் கூடும் தருணத்தில் அறிக்கைகள் எமக்கு கிடைக்கப்பெற்ற பின்னர் அதனை ஆராய்ந்து கட்சியில் தீர்மானம் எடுக்கப்படும்.

அதனடிப்படையில் எமது வாக்களிப்பு இடம்பெறும்-என்றார். (அ)

# போலந்தில் வேலை தருவதாக கூறி மோசடியில் ஈடுபட்ட பெண் கைது!

கொழும்பு, ஜூலை 01

போலந்தில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, 13 மில்லியன் ரூபாய் மோசடி செய்த பெண் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பியபோதே குறித்த பெண் கைது செய்யப்பட்டார் என குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

மேலும், குறித்த பெண் 44 வயதுடையவர் எனவும் இவர் தொடர்பில் 53 முறைப்பாடுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் பத்தரமுல்லைப் பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் எனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

# ராஜபக்ஷவினரின் பெயரை கூறவும் சிலருக்கு அருவருப்பாக இருக்கிறது!

## சுட்டிக்காட்டுகிறார் விமலவீர திஸாநாயக்க

கொழும்பு, ஜுலை 01

**ராஜபக்ஷவினரின் தோளில் ஏறி அதிகாரத்துக்கு வந்த சிலர் தற்போது ராஜபக்ஷவினரின் பெயரை கூறவும் அருவருக்கின்றனர் என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அஸ்வெசும நிவாரண உதவிகள் அப்பாவி வறிய மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பொதுஜன பெரமுன இருக்கின்றது.

எமது கட்சியின் தலைவர்கள் முழு வரலாற்றிலும் வறிய மக்களுக்காக குரல் கொடுத்துள்ளனர். வேலை செய்துள்ளனர்.

எனினும் நாட்டில் அனைத்தையும் எதிர்க்கும் அரசியல் அமைப்பொன்று அஸ்வெசும தொடர்பில் எதிர்ப்பு அலையை உருவாக்க முயற்சித்து வருகிறது.

அஸ்வெசும நிவாரணங்களை வழங்க மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் குறைப்பாடுகள் இருக்கின்றன. நாட்டில் நடத்தப்பட்ட அனைத்து ஆய்வுகளிலும் குறைப்பாடுகள் இருக்கின்றன.

நிவாரணம் கிடைக்கவேண்டியவர்களுக்கு கிடைக்காமல் போயுள்ளதுடன் நிவாரணம் தேவையில்லாதவர்களுக்கு நிவாரணம் கிடைத்துள்ளது.

ரணசிங்க பிரேமதாஸ அம்பாறையில் உள்ள 20 பிரதேச செயலக பிரிவிகளில் 2 பிரிவுகளுக்கு மட்டுமே ஜனசவிய நிவாரணங்களை வழங்கினார்.

எனினும் சமுர்த்தி முழு நாட்டுக்கும் வழங்கப்பட்டது. அதேபோல் அஸ்வெசும நிவாரணம் கிடைக்கவேண்டியவர்களுக்கு கிடைப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம்.

ராஜபக்ஷவினரே நாட்டின் வறிய மக்களுக்கு அதிகளவான சேவைகளைச் செய்தனர்.



அவர்களே நாட்டை நவீனமயப்படுத்தினர். நாட்டின் வீதிகள், பிரதேச செயலகங்கள், பாடசாலை உட்பட அனைத்தையும் ராஜபக்ஷவினரே நவீனமயப்படுத்தினர்.

எனினும் ராஜபக்ஷவினரின் தோளில் ஏறிய அதிகாரத்திற்கு வந்த சிலர் ராஜபக்சவினரின் பெயரை கூறவும் அருவருக்கின்றனர்-என்றார். (அ)

# சூரிய கலம் நிலுவையை செலுத்திய மின்சார சபை

கொழும்பு, ஜுலை 01

வீடுகளில் சூரிய கலம் பொருந்தியுள்ள வாடிக்கையாளர்களுக்கு ஏப்ரல் 30 ஆம் திகதி வரை செலுத்தவேண்டிய நிலுவையில் இருந்த நான்கு பில்லியன் ரூபாவை இலங்கை மின்சார சபை செலுத்திவிட்டதாக தெரிவித்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வழங்குநர்கள்,தனிப்பட்ட மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பிற வழங்குநர்களுக்கான அனைத்து நிலுவைக் கட்டணங்களையும் அடுத்த ஆறு மாதங்களுக்குள் இலங்கை மின்சார சபை செலுத்தி முடிக்கும் என மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். (அ)

## சிங்கராஜ வனத்தின் உயிரினங்களை கடத்த முயற்சி

கொழும்பு, ஜுலை 01

சிங்கராஜ வனத்திலிருந்து சட்டவிரோதமாக உயிரினங்களை எடுத்துச் செல்ல முயற்சித்த ஈரானிய பிரஜைகள் மூவரும் இலங்கை பிரஜையொருவருமாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சில அரியவகை உயிரினங்களும் மூலிகை வகைகளும் மீட்கப் பட்டுள்ளதாக வனப்பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிங்கராஜ வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து இவர்கள் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப் படவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நீதிமன்றத்தில் ஹெரோயின் மாயம் உத்தியோகத்தர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஜுலை 01

கொழும்பு மேல் நீதிமன்றத்தின் களஞ்சிய அறையில் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் இருந்ததாகக் கூறப்படும் இரண்டு பிளாஸ்டிக் பைகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றில் பணிபுரியும் இரண்டு உத்தியோகத்தர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் பைகளுடன் கைது செய்த போது, அவர்களிடம் ஹெரோயின் இல்லை என பொலிஸாருக்கு கிடைத்த தகவலில் தெரியவந்துள்ளது.

இந்த இரண்டு பைகளிலும் ஹெரோயின் இருந்ததாகத் தெரியவருவதாகவும், அறிக்கைக்காக அரச பகுப்பாய்வாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த பைகளில் ஹெரோயின் வைக்கப்பட்டது தொடர்பான குறிப்புகளும் காணப்படுவதாகவும், அவை 2015 ஆம் ஆண்டு களஞ்சிய அறையில் வைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. பன்னிப்பிட்டியைச் சேர்ந்த 27 மற்றும் 31 வயதுடைய இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் நீதிமன்ற களஞ்சிய அறையில் பணியாற்றும் எழுத்தாளர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஒருவர் திருட்டு குற்றச்சாட்டின் பேரிலும் மற்றைய நபர் திருட்டுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரிலும் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# மனித உரிமை ஆணைக்குழுவால் யாழ்.பொலிஸாருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜுலை 01

சித்திரவதையினால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் காங்கேசன்துறையில் பொலிஸ் பயிற்சி பாடசாலையிலுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் பிரதான வளவாளராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் செயல்பட்டார்.

இக்கலந்துரையாடலில் சித்திரவதையிலிருந்து பாதுகாப்பு என்னும் தலைப்பில் சித்திரவதைக்கு எதிரான சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்டங்கள் தொடர்பிலும், சித்திரவதைக்கு எதிரான தண்டனைகள் தொடர்பிலும் சித்திரவதையிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வகிபாகம் என்பன கலந்துரையாடப்பட்டன. (அ)

# வவுனியா பண்டாரிக்குளத்தில் குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு!

வவுனியா, ஜுலை 01

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், மூவர் கைது செய்யப் பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இரவு மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதிக்கு ஜீப் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றில் வந்த குழுவினர் அப்பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மீது வாளால் வெட்டி விட்டு தப்பிச் செல்ல முயன்றுள்ளனர்.

இதன்போது, கிராம மக்கள் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியபோதும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதனையடுத்து, கிராம மக்கள் விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கியதையடுத்து அங்கு வந்த விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மூன்று பேரை கைது செய்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைந்தனர்.

அத்துடன் தாக்குதலில் ஈடுபட்டவர்களின் ஜீப் வண்டியும் மீட்கப்பட்டுள்ளதுடன், அதில் இருந்து இரு வாள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இச் சம்பவத்தில் பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய செல்வம் தவேந்திரன் வாள்வெட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் பண்டாரிக்குளம், மகாறம்பைக்குளம் மற்றும் வெளிக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் மைதானம் திறந்தார் மைத்திரி

யாழ்ப்பாணம், ஜுலை 01

3.2 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு செய்யப் பட்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் மைதானம் நேற்று வியாழக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப் பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

நாடு முழுவதும் அனைத்து கல்வி வலயங்களையும் உள்ளடக்கிய 100 பாடசாலை விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டத்தின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் முன்மொழிவில், 3.2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானம் புனரமைப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், பாடசாலை அதிபர் இராஜலட்சுமி சுப்பிரமணிய குருக்கள், சுதந்திரக் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் சஜின் வாஸ் குணவர்த்தன, சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர் சமில லியனகே, பாராளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த மித்ரபால, சுதந்திரக் கட்சியின் பொலநறுவை மேற்கு அமைப்பாளர் தஹாம் சிறிசேன, பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ)

**ஜுபைர் அகமது**

# வாக்னர் ‘கிளர்ச்சி’ - ரஷ்யா மீதான சீனாவின் நம்பிக்கை வலுவிழக்குமா?

கடந்த வெள்ளிக்கிழமை, ரஷ்யாவின் தனியார் ராணுவப்படையான ‘வாக்னர்’ படையின் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஜின், அதிபர் புடினுக்கு எதிராக ‘கிளர்ச்சி”யொன்றை அறிவித்தார். தனது படையை மாஸ்கோ நோக்கிச் செலுத்தவும் செய்தார்.

ஆனால் ஒரே நாளில், தொடங்கிய வேகத்திலேயே பின்வாங்கினார்.

இருப்பினும் அந்த 24 மணி நேரங்கள் ஏற்படுத்திய பரபரப்பு இன்னும் அடங்கவில்லை. சர்வதேச அரசியல் நிபுணர்கள் புடினின் ஆதிக்கம் பலவீனமடைந்துவிட்டதாக கருதுகின்றனர்.

அனைத்திற்கும் மேலாக, இது ரஷ்யாவின் நெருங்கிய நண்பனான சீனாவையும் கவலைக்குள்ளாக்கியிருக்கிறது. இருப்பினும் சீனா, புடினுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்திருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமையன்று சீன வெளியுறவுத்துறை அமைச்சர் ஷின் காங் பீய்ஜிங்கில் ரஷ்ய துணை வெளியுறவுத்திறை அமைச்சர் அந்த்ரேய் ருட்யென்கோவைச் சந்தித்துப் பேசினார். இதன்பிறகு இச்சம்பவத்தைச் சீனா ‘ரஷ்யாவின் உள்விவகாரம்’ என்று கூறியது. மேலும் தனது ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்க ரஷ்யா எடுக்கும் முயற்சிகளுக்குத் தன் ஆதரவையும் தெரிவித்தது.



### சீன-ரஷ்ய உறவு எவ்வளவு வலுவாக இருக்கிறது?

இரு பெரும் வல்லரசுகளான சீனாவும் ரஷ்யாவும் நெருங்கிய நண்பர்கள். இரு நாட்டிற்குமான பொதுவான நலன்கள் கருதி சீனா - ரஷ்யா இடையே நட்பும்



மூலோபாயக் கூட்டணியும் உருவாகியுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு பிப்ரவரி 4ஆம் தேதி, குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் துவங்குவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன், சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷ்ய அதிபர் புடினுடன் நீண்ட சந்திப்பு ஒன்றை நிகழ்த்தினார். அதன்பின் வெளியிடப்பட்ட ஒரு கூட்டு அறிக்கையில், ரஷ்ய-சீன உறவை ‘எல்லைகள் கடந்த நட்பு’ என்று இரு நாடுகளும் வர்ணித்தன.

இதற்கு நான்கு நாட்களுக்கு பிறகு ரஷ்யா உக்ரேன் மீது போர் தொடுத்தது. ஆனால் இன்றுவரை சீனா இதனை விமர்சிக்கவில்லை. இரு நாடுகளுக்கு இடையிலான உறவு மேலும் வலுப்பெற்றிருக்கிறதே தவிர அதில் எந்த உரசலும் இல்லை.

சீனா - ரஷ்யா உறவு குறித்து பேசிய, ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தின் சர்வதேச அரசியல் பேராசிரியர் ஸ்வரண் சிங், ‘சீனா ரஷ்யாவுடன் மிகவும் நெருங்கி வந்துவிட்டது. இனிமேல் அதனால் விலக முடியாது,” என்கிறார்.

### வாக்னர் குழுவின் ‘கிளர்ச்சி”சீனாவுக்கு எவ்வளவு பெரிய தலைவலியாக இருக்கும்?

“இது சீனாவுக்கு மிகப்பெரும் கவலையாக இருக்கும், ஏனெனில் புதினோடு சேர்ந்து சீனா சர்வதேச உறவுகளில் மாற்றம் கொண்டுவரப் பார்க்கிறது,” என்கிறார் ஸ்வரண் சிங்.

ஆனால், ஸ்வரண் சிங்கின் கூற்றுப்படி, இதைவிட சுவாரஸ்யமான விஷயம் என்னவெனில், இக்கிளர்ச்சி புடினுக்கு எந்த அளவு பாதிப்பை ஏற்படுத்தியது என்பதுதான். “ஆனால் அதைப்பற்றிய தகவல்கள் இன்னும் வெளிவரவில்லை,” என்கிறார் அவர்.

### வாக்னர் ‘கிளர்ச்சி’க்குப் பின் புடின் என்ன சொன்னார்?

இச்சம்பவத்துக்குப் பின் தொலைக்காட்சியில் உரையாற்றிய அதிபர் புடின், அதனை “மிகப்பெரிய குற்றம், தேசத்துரோகம், மிரட்டல், தீவிரவாதம்,” என்று கடுமையாக எதிர்வினையாற்றினார்.

ஆனால் சில மணி நேரங்களுக்குப்பின், சமரசத்தின் ஒரு பகுதியாக, வாக்னர் குழுவின் தலைவர் ப்ரிகோஜினுக்கு எதிராக இருந்த அனைத்து குற்றச்சாட்டுகளையும் திரும்பப் பெறப்படுவதக அறிவிக்கப்பட்டது.

இது புடினுடைய பிம்பத்தைச் சற்று பாதித்திருந்தாலும், ரஷ்யாவில் பெரியளவு தாக்கம் இருக்காது என்கிறார், சிங்கப்பூரைச் சேர்ந்த சீன வம்சாவழி அரசியல் விமர்சகரான சுன் ஷி.

“இதன்மூலம் புடினுடைய அதிகாரம் வேண்டுமானால் பலவீனமடைந்திருக்கலாம் ஆனால் ரஷ்யா என்ற நாடு பலவீனமடையவில்லை. ஏனெனில் இந்தக் கிளர்ச்சி 24 மணிநேரத்தில் சரிசெய்யப்பட்டுவிட்டது. இது ஒரு விரும்பத்தகாத



நிகழ்வு மட்டுமே,” என்கிறார் அவர்.

### சீன ஊடகங்கள் என்ன சொல்கின்றன?

சீன செய்தித்தாளான ‘குளோபல் டைம்ஸ்’, புடின் ஒரே நாளில் கிளர்ச்சிக்கான இந்த முயற்சியை அடக்கியதன் மூலம் தன்னை மேலும் வலுவான ஒருவராகக் காட்டியிருக்கிறார் என்று ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

“என்னதான் மேற்கத்திய ஊடகங்கள் இக்கிளர்ச்சி புடினின் பலவீனத்தை வெளிப்படுத்தியிருக்கிறது என்று கூறினாலும், அவர் தீர்க்கமான நடவடிக்கை எடுத்து அதற்கு ஒரு முடிவு கட்டியிருக்கிறார். இது, உள்நாட்டுக் கிளர்ச்சிகளைச் சமாளிக்கும் ஆற்றல் ரஷ்யாவிற்கு உள்ளது என்பதைக் காட்டுகிறது,” என்று கூறியிருக்கிறது அப்பத்திரிகை.

### சீனாவின் அரசியல் விமர்சகர்கள் என்ன சொல்கிறார்கள்?

கிளர்ச்சிக்கான இந்த முயற்சியைச் சமாளிக்க, புடின், தனது நண்பரும் பெலாரூசின் அதிபருமான லூகாஷென்கோவிடம் உதவிக்குச் செல்லவேண்டியிருந்தது.

லூகாஷென்கோ தலையிட்டுச் சமரசம் செய்தபின், புடின், வாக்னர் நிறுவனத்தின் தலைவரான யெவ்கெனி ப்ரிகோஜினுடைய கோரிக்கையை ஏற்றார். அதாவது ப்ரிகோஜொன் பெலாரூசிற்குச் செல்ல அனுமதி தரப்பட்டது. மேலும் அவர் மீதிருந்த குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டன.

சுன் ஷி, ‘சீனா, புடினின் உண்மையான அதிகாரத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இச்சம்பவத்தின் ஒரு நேர்மறையான விளைவு, உக்ரேனுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யாவை சீனா வலியுறுத்தக்கூடும். அதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்திருக்கின்றன. ஆனால் இது என்னுடைய தனிப்பட்ட கருத்து,” என்கிறார் அவர்.

### இது இந்தியாவை எப்படி பாதிக்கும்?

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமான உறவு நெடுங்காலமாகத் தொடர்கின்ற ஒன்று. இந்தியா ரஷ்யாவிடமிருந்து பல தசாப்தங்களாக ஆயுதங்கள் வாங்கி வருகிறது. மேலும் சென்ற வருடம் உக்ரேன் போர் துவங்கியதிலிருந்து இந்தியா ரஷ்யாவிடமிருந்து அதிக அளவில் எண்ணெயையும் வாங்கி வருகிறது.

சீனாவைப்போல் இந்தியாவும் உக்ரேன் போருக்காக ரஷ்யாவை வெளிப்படையாக விமர்சிக்கவில்லை.

இதுகுறித்து பேசிய ஸ்வரண் சிங், இந்தியாவுக்கு ரஷ்யாவுடனான உறவு முக்கியம். ஆனால் கடந்த 20 ஆண்டுகளாக இந்தியா மற்ற நாடுகளுடனான உறவுகளையும் மேம்படுத்தி வந்திருக்கிறது.

கடந்த 2002ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு வரை, ரஷ்யாவிடமிருந்து இந்தியா வாங்கும் ராணுவத் தளவாடங்களின் பங்கு 68 வீதத்திலிருந்து 47 வீதமாகக் குறைந்திருக்கிறது. அதேசமயம் சமீபத்தில் எண்ணெய் இறக்குமதி மட்டும் 44 பில்லியன் டாலர்களாக அதிகரித்திருக்கிறது.

ஸ்வரண் சிங்கின் கருத்துப்படி, கடந்த 20 ஆண்டுகளில் ரஷ்யாவின் மீது இந்தியாவின் சார்பு குறைந்து, சீனாவின் சார்பு அதிகரித்திருக்கிறது. ●



# இலங்கை உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு: ஐந்து நாட்களுக்கு தொடர் விடுமுறை, நிச்சயமற்ற நிலைமையை உருவாக்குமா?

ரஞ்சன் அருண் பிரசாத்

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் வியாழன் மாலை நடைபெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தின் போது உத்தேச உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான யோசனைக்கு அனுமதி கிடைத்துள்ளது.

இதையடுத்து, உத்தேச உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடார்பான யோசனை நாடாளுமன்ற நிதிக்குழுவில் சமர்பிக்கப்பட்டு, இன்று சனிக்கிழமை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்த நிலையில், வார இறுதி விடுமுறை நாளில் நடத்தப்படவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துக்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### கடன் மறுசீரமைப்புக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

இதனையடுத்து உத்தேச உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் ஊடாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன், திரும்பச் செலுத்தாதிருப்பதை தடுக்கும் வகையிலான உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் வசந்த சமரசிங்க உள்ளிட்ட 6 பேரினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

"அரசாங்கம் என்ன செய்ய போகின்றது என்பதை முன்கூட்டியே அறிந்தமையினால், நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். எமது நிதியத்தில் கைகளை வைக்க வேண்டாம் என்ற இடைகால தடையுத்தரவொன்றை பெற்றுத் தருமாறு உயர்நீதிமன்றத்திடம் கோரியுள்ளோம்," என அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.



### ஐந்து நாட்கள் தொடர் விடுமுறை அறிவிப்பு

இந்த மாதம் 30ம் தேதி விசேட வங்கி விடுமுறையொன்றை அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதன்படி, அன்றைய தினம் பங்குச்சந்தை வர்த்தகத்திற்கும் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஜூன் 29ம் தேதி ஆரம்பமான விடுமுறையானது, தொடர்ச்சியாக ஐந்து தினங்களுக்கு விடுமுறையாக காணப்படுகின்றது.

புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு 29ம் தேதி விடுமுறை அறிவிக்கப்பட்டதுடன், 30ம் தேதி விசேட விடுமுறையை அரசாங்கம் அறிவித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து, முதலாம் மற்றும் இரண்டாம் தேதிகளில் வார இறுதி விடுமுறை தினங்களாகும்.

மூன்றாம் தேதி பூரணை தின விடுமுறை காணப்படுகின்றது.

இதன்படி, தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் விடுமுறை காணப்படுகின்ற நிலையில், இந்த ஐந்து தினங்களில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்தை அமல்படுத்த எதிர்பார்த்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

"உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை அமல்படுத்துவதற்காகவே இந்த மாதம் 30ம் தேதியை வங்கி விடுமுறை தினமாக அறிவித்துள்ளோம்," என்கிறார் அவர்.

மேலும் இத்திட்டத்தை அமல்படுத்த குறிப்பிட்ட கால எல்லையொன்று தேவைப்படுகின்றது எனவும், அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல், நாடாளுமன்றத்திற்கு அதனை சமர்ப்பித்தல், நாடாளுமன்றத்தில் நிதி செயற்குழு உள்ளிட்ட குழுக்கள் கலந்துரையாடுவதற்கு ஒரு சில காலம் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

"நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தி, அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.



தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் சந்தை மூடப்படுவதன் ஊடாக, இந்த திட்டத்தை நிறைவுக்கு கொண்டு வர முடியும் என அரசாங்கம் நம்புகின்றது," என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டார்.

இந்த காலப் பகுதியில் வங்கி, இணைய வழி பணக் கொடுக்கல் வாங்கல்கள், ஏ.டி.எம் பணப்பரிமாற்று நடவடிக்கைகள், வார இறுதி வங்கி சேவைகள் என அனைத்து வங்கி சேவைகளும் வழமை போன்று செயற்படும் என அவர் அறிவித்துள்ளார்.

### 'மக்களின் பணத்திற்கு பாதிப்பு இல்லை'

வங்கிகளில் பணத்தை வைப்பு செய்துள்ள எந்தவொரு நபருக்கும், இந்த உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் ஊடாக பாதிப்பு ஏற்படாது என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவிக்கின்றார்.

"வங்கிகளில் வைப்பு செய்துள்ள வாடிக்கையாளர்களின் பணத்திற்கு ஏதோ ஒரு வகையில் பாதிப்பு ஏற்படக்கூடும் என சிலர் கட்டுக் கதைகளை முன்வைத்து வருகின்றார்கள்," என்றார் அவர்.

மேலும், உத்தேச உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் போது, உள்நாட்டு வங்கி மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் வைப்பு செய்துள்ள பணம் மற்றும் அதற்காக தற்போது கிடைக்கின்ற வட்டி ஆகியவற்றில் எந்தவொரு குறைவும் ஏற்படாது என மத்திய வங்கி என்ற விதத்தில் உறுதியாக கூற முடியும், என்று கூறினார்.

"உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்தில் வங்கி கட்டமைப்பு மற்றும் வங்கிகளில் வைப்பு செய்துள்ள மக்களின் பணம் ஆகியவற்றின் பாதுகாப்பை மத்திய வங்கி உறுதி செய்கின்றது," எனவும் கலாநிதி நந்தலால் வீரசிங்க குறிப்பிடுகின்றார்.

உள்நாட்டுக் கடன் சீரமைப்பு என்றால் என்ன, ஐந்து நாட்கள் விடுமுறை ஏன்? அதற்கான காரணம் என்ன? என்பது தொடர்பில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம். கணேசமூர்த்தியை தொடர்புக்கொண்டு வினவியது.

### உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்றால் என்ன?

"கடன் மறுசீரமைப்பு என்பது வேறொன்றும் கிடையாது. வங்கிகளிடமிருந்து அரசாங்கம் கடனை பெற்றுக்கொண்டுள்ளது. அதேபோன்று, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றிலிருந்தும் அரசாங்கம் கடனை பெற்றுக்கொண்டுள்ளது. அந்தக் கடன்களின் ஒரு பகுதியை எப்படி பதிவளிப்பு செய்யலாம் என்பதே இதன் நோக்கம்.

'அரசாங்கத்திற்கு வழங்கிய கடனை, இந்த நிறுவனங்கள் பதிவளிப்பு செய்ய வேண்டும். அப்படியென்றால், குறைக்க வேண்டும். இந்த நிறுவனங்கள் அரசாங்கத்திற்கு எப்படி கடன் கொடுத்திருக்கும்? யாருடைய பணம்? இது பொதுமக்களின் பணம். பொதுமக்கள் வைப்பு செய்யும் பணத்தை திறைசேரி முறி, திறைசேரி உண்டியல் ஆகியவற்றில் முதலீடு செய்திருக்கும். அதிலிருந்து கிடைக்கும் லாபத்தில் வங்கி ஒரு வருவாய் லாபத்தை அனுபவிக்கும். அதில் ஒரு சிறிய பகுதியை வட்டி என்ற



அடிப்படையில் பொதுமக்களுக்கு கொடுக்கும்.

"திறைசேரி வட்டி வீதம் 30, 32 வீதமாக இருந்தது. ஆனால் வைப்பாளர்களுக்கு கொடுத்த வட்டி வீதம் அண்மைக் காலமாக மிகக் குறைவு. அதேபோன்று ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியன திறைசேரி ஊடாகவே அரசாங்கத்திற்கு கடனை வழங்கியுள்ளது. இப்படி வழங்கப்பட்ட கடனில் ஒரு பகுதியை பதிவளிப்பு செய்யலாமா என்றே பார்க்கின்றார்கள்.

"நேரடியாகப் பார்க்கும் போது, பொதுமக்கள் வைப்பு செய்த பணத்தில் ஒரு பகுதியை இழக்க வேண்டிய



நிலை ஏற்படும் என்ற ஒரு பார்வையும் இருக்கின்றது. அதேபோன்று, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றில் ஒரு பகுதியை இழக்க வேண்டி ஏற்படும் என்ற பார்வையும் இருக்கின்றது. வைப்பு செய்தவர்களின் பணம் ஒருபோதும் எடுக்கப்படாது என அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகிய பணத்திற்கும் எந்தவித பாதிப்பும் வராது என அரசாங்கம் கூறுகின்றது.

"இந்த இரண்டிலும் கைவைக்காமல், அரசாங்கம் எப்படி கடன் மறுசீரமைப்பை செய்ய முடியும் என்று பார்த்தால், வங்கிகளில் செய்யப்படும் வைப்புக்களின் ஊடாக வருகின்ற லாபத்தில் ஒரு பகுதியை அரசாங்கம் வெட்டி விடலாம். அதாவது ஒரு பகுதியை தருமாறு கேட்கலாம்."

### உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு ஏன் நீண்ட விடுமுறை தேவைப்படுகின்றது?

'கடன் மறுசீரமைப்பு செய்யப்படும் இந்தக் காலப் பகுதியில் வங்கி நடவடிக்கைகள் மற்றும் பங்குச் சந்தை நடவடிக்கைகள் செய்யப்படாமல் இருப்பது அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும். ஏனென்று சொன்னால், அடுத்து வரும் நாட்கள் மிகவும் சர்ச்சைக்குரிய நாட்களாக காணப்படுகின்றன.

'இந்தக் காலப் பகுதியில் பொதுமக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய நிச்சயமற்ற நிலைமைக்கு மத்தியில், எங்களுடைய பணத்தை மீள தாருங்கள் என மக்கள் வங்கிக்கு சென்று கேட்டால் என்ன நடக்கும்? அதேபோன்று, பங்குச் சந்தையிலுள்ள அனைவரும், பங்குகளை விற்க தொடங்கினால் என்ன நடக்கும்? இவ்வாறான நடவடிக்கைகளை தடுப்பதே இந்த விடுமுறை வழங்கப்பட்டமைக்கான நோக்கமாகும்."

### 'ஏதோ ஒரு பெரிய பாதிப்பு வரக்கூடும்'

மேலும் இலங்கை அரசாங்கத்தினால் அடுத்து வரும் நாட்களில் முன்னெடுக்கப்படும் கடன் மறுசீரமைப்பு திட்டமானது, வெளிநாடுகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தொடர்புப்படாது எனவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தி தெரிவிக்கின்றார்.

இது உள்நாட்டு கடன் வழங்குநர்களுக்கே தாக்கத்தை செலுத்தும் என கூறிய அவர், வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பு குறித்து அரசாங்கம் தற்போது கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடனை மீள செலுத்த முடியாது எனவும், தம்மால் குறிப்பிட்டளவு தொகையையே மீள செலுத்த முடியும் எனவும் கூறுவதே இந்த கடன் மறுசீரமைப்பு திட்டம் என அவர் தெளிவூட்டினார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான நடவடிக்கைகளினால், ஏதோ ஒரு வகையான பெரிய பாதிப்பு வரக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதாகவே தான் கருதுவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தி பிபிசி தமிழுக்கு தெரிவித்தார்.

ஈழநாடு

# அஸ்வெசும நலன்புரி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எவ்விதத்திலும் அரசியல் அதிகாரத்தின் தலையீடு இல்லை

## பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 01

அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசியல் அதிகாரத்தின் தலையீடுகள் இருக்காது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டம் தொடர்பான பிரச்னைகளுக்கு அதிகாரிகளின் தலையீட்டின் மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென அமைச்சர் வலியுறுத்தினார்.

கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

கேள்வி- அஸ்வசும திட்டம் தொடர்பில் நாட்டில் பெரும் சர்ச்சை எழுந்துள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

பதில் - நிவாரணம் கிடைக்காதவர்களுக்காக மேன்முறையீடு செய்வதற்கு அரசாங்கம் கால அவகாசம் வழங்கியுள்ளது. சமுர்த்தி பெறுபவர்களில் 30 வீதமானவர்கள் அதற்குத் தகுதியற்றவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதற்கான கணக்கெடுப்பு நடத்த அரசு முடிவு செய்தது. ஆனால் அதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் எதிர்ப்பு



தெரிவித்ததுடன், தவறான தகவல் அளித்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான குழு ஒன்று அமைத்து அதன் ஊடாக இது தொடர்பாக ஆய்வு செய்து அனுப்பி இருக்க வேண்டும். ஆனால் அந்த மக்கள் அதைச் செய்யவில்லை.

அதிகாரிகள் தவறு செய்யவில்லை என்றால் அவர்கள் பயப்பட தேவையில்லை. குறிப்பிட்ட நபர்கள் மற்றும் குழுக்களின் சுயநலம் காரணமாக, அவர்கள் திட்டமிட்டு இந்த திட்டத்தை சீர்குலைக்க வேலை செய்தனர்.

குறைகள் தொடர்பாக முன்வைக்கப்படும் முறையீடுகளை ஆராய கிராம குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என அனைத்து பிரதேச செயலாளர்களும் தெரிவிக்கின்றனர். இந்தச் செய்தியை அரசாங்கத்தின் உயர்மட்டத்திற்கு தெரிவிப்போம்.

இதை சமாளிக்க கிராம குழுக்களுக்கு அதிகாரம் வழங்க அதிகாரிகள் விரும்பவில்லை என்றால், இப்பணியை அத்தியாவசிய சேவையாக செய்ய வேண்டும்.

**கேள்வி -** சமுர்த்தி அதிகாரிகள் ஏன் இப்படி இழுத்தடிக்கிறார்கள்?

**பதில் -** எனக்கு புரியவில்லை. காரணம் என்ன, நீங்கள் ஏதாவது சரியாகச் செய்தால், ஏன் பயப்படுகிறீர்கள்? ஒரு கிராமசேவக களத்தில் சுமார் 10 உயர் அதிகாரிகள் உள்ளனர். அவர்களால் இதைச் செய்ய முடியும். ஒரு அரசியல் அதிகாரம் என்ற வகையில், மக்களிடமிருந்து வரும் முறையீடுகள் அதற்குப் பரிந்துரைக்கப்படலாம்.

**கேள்வி -** சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இந்தப் பணியை வெளிப்படைத் தன்மையுடன் செய்கிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா?

**பதில் -** சமூர்த்தி அமைப்பு மிகவும் நல்லதோர் அமைப்பாகும். சமூர்த்தி அதிகாரிகள் பயனாளிகளுக்காக முன்னிற்க வேண்டும். இல்லையெனில், தொழில் உரிமைகளுக்காக அதிகாரிகள் தொழிலை விட்டு வெளியேற முடியாது. அப்படியாயின் நாட்டை நடத்த முடியாது. எனவே, சமுர்த்தி அதிகாரிகள் எடுத்த தீர்மானத்தை நான் ஏற்கவில்லை.

**கேள்வி -** சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பயனாளிகளிடம் கடன் பெற்றுள்ளார்களா?

**பதில் -** மொத்தமாக எடுத்துக்கொண்டால் மூன்று அல்லது நான்கு சதவிகிதம் இப்படித்தான் இருக்கிறது. விசாரணைகள் நடந்து வருகின்றன. இந்த சீர்குலைவு அதிகரிப்புக்குப் பின்னால் அதே கடன் வாங்கியவர்களும் இருக்கலாம்.

ஓரிருவர் செய்யும் வேலையினால் முழு சமுர்த்தி இயக்கமும் நலிவடைகிறது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசியல் அதிகாரம் தலையிட முடியாது. இதற்கு அதிகாரிகள் இணைந்து தீர்வு காண வேண்டும்.

**கேள்வி -** உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு பிரேரணையை அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியுமா?

**பதில் -** இது தொடர்பில் அமைச்சரவையில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. அமைச்சரவை அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது நிலவி வரும் இந்த நெருக்கடியை தீர்க்க இது ஒரு நல்ல திட்டம்.

அதன் பின்னர் இந்த பிரேரணையை ஆளும் கட்சி கூட்டத்திற்கு அனுப்பி வைத்தோம். அங்கு மக்களிடையே உள்ள சந்தேகங்கள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசினர். அந்த கேள்விகளுக்கு ஜனாதிபதி மற்றும் மத்திய வங்கி ஆளுனர் பதில்களை வழங்கினர். அந்த பதில்களில் நாங்கள் திருப்தியடைந்தோம்.

இந்த முன்மொழிவு நிதிக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். மீண்டும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்படும். இதில் நாங்கள் மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் இருக்கிறோம்.

இது குறித்து சனிக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும். சிறந்த பிரேரணைகள் இருந்தால் முன்வைக்கலாம்.

வரிசை யுகத்திற்கு செல்லாமல் நாட்டை மீட்க நினைப்பவர்கள் இதற்கு உதவுவார்கள். நாடு அராஜகமாக மாற கூடாது என்று நினைப்பவர்கள் இதை எதிர்ப்பார்கள்.

**கேள்வி -** எதிர்க்கட்சி இதற்கு எதிரானதா?

**பதில் -** எதிர்க்கட்சியினர் போராட்டத்திற்கு சென்றனர். எண்ணெய், எரிவாயு வரிசைகள் இல்லாது போகும் போது நாட்டை அராஜகமாக்க நினைக்கிறார்கள். அப்போதுதான் அவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்ற முடியும்.

இது குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும். யார் நாட்டை மீட்க விரும்புகிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்களா? யாருக்குத்தான் பிடிக்காது?

நாங்கள் சரியானதைச் செய்கிறோம் என்று ஜனாதிபதி கூறுகிறார்.

(அ)









# குடிதண்ணீருக்கு அல்லாடும் கல்லரிப்பு பழங்குடி மக்கள்!

## அரசியல்வாதிகள், அதிகாரிகள் கவனிப்பார்களா?

**மட்டக்களப்பு, ஜுலை 01**

**மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வரலாற்று பிரசித்தி பெற்ற முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கின்றது அந்த கிராமம்.**

**கல்லரிப்பு என்பது அக் கிராமத்தின் பெயர். அந்த கிராமத்தில் ஆக 41 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் கடந்த காலங்களிலே தமது குடிதண்ணீர் மற்றும் தேவைகளுக்காக ஆற்றிலும் ஓடையிலும் தங்கியிருந்தார்கள்.**

குடிதண்ணீர் பிரச்னை பற்றி அவர்கள் கூறியதாவது-

சுத்தமான நீர் எடுக்க வேண்டுமாக இருந்தால் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் நடந்து அதனைப் பெறவேண்டிய தேவையுள்ளது.

நாளடைவில் பிரதேச சபையூடாக குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்துள்ளது . அதுவும் சில நேரங்களில தாமதமாகித்தான் கிடைக்கும்.

அவ் வேளைகளில் ஆற்றில் இருந்து நீரை பெறுவோம். எமது ஊரில் பாடசாலை இல்லை.

மாணவர்கள் சீருடைகளை இங்கு கழுவினால் பழுப்பு நிறத்தில் காணப்படும். அருகிலுள்ள பாடசாலைக்குச் செல்லும் எமது மாணவர்களுக்கு அது சிரமம். ஆசிரியர்கள் சிலவேளைகளில் இந்த நிறம் பற்றி கேள்விகள் கேட்பதுண்டு.

இந் நிலையில் இங்கு குடிதண்ணீர் திட்டம் ஒன்றை மேற்கொள்ள வெளிநாட்டு உதவியோடு அரச சார்பற்ற நிறுவனமொன்று முன்வந்தது.

இந்த குடிதண்ணீர் திட்டம் 31-3-2023 இல் ஆரம்பிக்கப்பட்டது.

ஆற்றில் இருந்து நீரை பெற்று சுத்திகரிப்புச் செய்து அதனை வழங்குவதற்காக மின்சாரச் செலவுக்காக மாதம் 100 ரூபாய் வழங்குமாறு மக்களிடம் கோரப்பட்டது. மக்களும் மகிழ்ச்சியில் அந்த நூறு ரூபாய் வழங்கினார்கள்.

ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரே ஒரு மாதம் வரைதான் நீடித்தது.

ஒருமாதமே குடிதண்ணீர் கிடைத்தது. அதுவும் எதிர்பார்த்த சுத்தமான நீர் இல்லை.

அதனைக்கூட ஏப்ரல் மாதம் மாத்திரமே அதனை வழங்கியிருந்தார்கள். அதன் பின்பு குடிதண்ணீர் வழங்கப்படவில்லை.

தற்போது இக் குடிதண்ணீர்த் திட்டமும் நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது நாங்கள் குடிதண்ணீருக்காக வெகு தூரம் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது.

இந் நிலையில் மக்கள் வெகுண்டெழுந்து அந்த குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவிய ஒப்பந்தக்காரரிடம் கேட்ட பொழுது அதற்குரிய இரசாயன திரவம் ஒன்று வரும். அது வருகின்ற பொழுது குடிதண்ணீர் தருவோம் என்று கையை விரித்துவிட்டார்.

அதனால் குடிதண்ணீருக்காக அல்லாடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது-என்றார்.

தற்பொழுது அந்த மக்கள் குடிதண்ணீருக்காக மீண்டும் மீண்டும் தொலைதூரம் பயணிக்கவேண்டி இருக்கின்றது .

இதனை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் கவனிக்கவேண்டும் என்று அந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் (அ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் மூன்று இளைஞர்கள் படுகாயம்

மட்டக்களப்பு, ஜுலை 01

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடியில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்தனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி கர்பலா வீதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் கடற்கரை வீதி வழியாகச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் இரண்டு மோட்டார் சைக்கிளிலும் சென்ற 19, 20 மற்றும் 21 வயதுடைய 3 இளைஞர்களே படுகாயமடைந்தனர்.

படுகாயமுற்ற மூன்று இளைஞர்களும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என காத்தான்குடி பொலிஸார் குறிப்பிட்டனர்.

(அ)

# சாய்ந்தமருது பள்ளிவாசலில் ஹஜ் பெருநாள் தொழுகை

அம்பாறை, ஜுலை 01

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நேற்று முன் தினம் காலை 7 மணிக்கு இடம் பெற்றது.

ஆண்கள் மற்றும் பெண்கள் என ஒரே தடவையில், குறிக்கப்பட்ட உரிய நேரத்தில் பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியினால் தொழுகையும் துஆ பிரார்த்தனையும் நடைபெற்றது.

ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம், செயலாளர் ஐ.எல். எம். மன்சூர், பொருளாளர் ஏ. சலீம் உட்பட நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், பெண்கள் உட்பட சிறுவர்களும் தொழுகையில் கலந்து கொண்டனர்.

(அ)



# மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

மட்டக்களப்பு, ஜுலை 01

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னவத்தை எனும் கிராமத்தில் மின்சாரம் தாக்கி நேற்று முன் தினம் வியாழக்கிழமை ஒருவர் உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 28 வயதுடைய கொணாகொல்ல பகுதியைச் சேர்ந்த இளைஞன் என அடையாளம் காணப்பட்டார்.

கொணாகொல்ல பகுதியிலிருந்து சின்னவத்தையில் மேற்கொண்டிருந்த வேளாண்மைச் செய்கையை பார்வையிடுவதற்காக சென்றவேளை வயல் பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்குண்டு அவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# ஓலைக் குடிசையில் வாழ்ந்த குடும்பத்துக்கு புதிய கல் வீடு

மட்டக்களப்பு, ஜுலை 01

மட்டக்களப்பு - ஏறாவூர் பற்று பிரதேசத்திற்குபட்பட்ட பலாச்சோலைக் எனும் கிராமத்தில் மூன்று பிள்ளைகளுடன் ஓலைக் குடிசையில் வசித்து வந்த சுந்தரலிங்கம் தர்சினி என்னும் குடும்பத்திற்கு லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டுவரும் சிறீலங்கன் பமிலி செரண்டிப் பவுண்டேசன் எனும் அமைப்பினால் 12 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கல்வீடு ஒன்று அமைக்கப்பட்டு உரிய குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்போது சிறிலங்கன் பமிலி செரண்டிப் பவுண்டேசன் அமைப்பின் தலைவர் குணரெட்ணம் ரகுலோட்சனன் மற்றும் அப்பகுதி மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

“ஓலைக் குடிசையில் இருந்து கொண்டு தினமும் நாட்கூலி வேலை செய்து தமது குடும்பத்தைப் பார்த்து வந்த எமக்கு இவ்வாறு ஓர் நிரந்தர கல்வீடு கிடைக்கப்பெற்றமை மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது. எமக்காக தாமாகவே முன்வந்து வீட்டை அமைத்து தந்த சிறீ லங்கன் பெமிலி செரண்டிப் பவுண்டேன் அமைப்பினருக்கு தமது ஆத்மார்த்தமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என சுந்தரலிங்கம் தர்சினி இதன்போது தெரிவித்தனர்.

(அ)



# பிரான்ஸின் சில நகர சபைகளில் இரவு நேரம் ஊரடங்கு உத்தரவு!

## வாண வெடிகளை ஏவி இளையோர் வன்முறை





பாரிஸ், ஜூலை 01

**நகரப்புற வன்செயல்கள் மேலும் பரவுவதைத் தடுப்பதற்காகப் பாரிஸ் பிராந்தியத்தில் சில நகரசபைப் பிரிவுகளில் நேற்று முன் தினம் இரவு உள்ளூர் மட்டத்தில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டது. தொடர்ந்து திங்கட்கிழமை வரை இவ்வாறு இரவு ஊரடங்கை அமுல் செய்ய நகரசபை முதல்வர்கள் தீர்மானித்துள்ளனர்.**

தமிழர்கள் அதிகமாக வசிக்கின்ற புற நகரங்களில் ஒன்றாகிய நியூலி-சு -மான் நகரம் கடந்த இரவுகளில் நடந்த வன்செயல்களால் பெருமளவில் சேதங்களைச் சந்தித்தது. அங்கு நேற்று முன்தினம் இரவு 23.00மணி முதல் நேற்று வெள்ளி காலை 06.00 மணிவரை உள்ளூர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பொலிஸ் நிலையம் ஒன்றும் பொலிஸாரது ஏழு வாகனங்களும் அங்கு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

ஹூத் - து-செய்ன் மாவட்டத்தின் கிளமா நகரத்திலும் இரவு ஒன்பது மணி முதல் நேற்று காலை ஆறு மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருந்தது.

அங்கு புதன்கிழமை இரவு மூண்ட வன்செயல்களின் போது ட்ராம் தொடரூந்து குண்டர் கும்பல் ஒன்றினால் தீக்கிரையாக்கப்பட்டது.

தமிழர்கள் வசிக்கின்ற மற்றொரு நகரமாகிய சவினி- லு -தொம்பிள் பகுதியில் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கு மட்டுமான ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. பாரிஸ் புற நகரங்களில் கலவரங்களில் ஈடுபடுவோரில் பெரும்பாலானவர்கள் 14-18 வயதுக்கு இடைப்பட்ட பதின்ம வயதினரே என்பதால் அத்தகைய இளையவர்களது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஊரடங்கை நகர சபை அமுல் செய்தது. பெற்றோர் அல்லது பாதுகாவலர் துணை இன்றி அவர்கள் வெளியே நடமாடுவது கட்டுப்படுத்தப்பட்டது.

இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்ட நொந்தேர் நகர்ப்பகுதியில் மூன்றாவது நாளாக நேற்று முன் தினம் இரவு மூண்ட வன்செயல்களின் போது வங்கிக் கட்டடம் ஒன்றுக்குத் தீ மூட்டப்பட்டது.

அதனோடு இணைந்த மாடிக் குடியிருப்புகளுக்கும் தீ பரவியது. தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இரவிரவாக வீதிகளில் கூடுகின்ற இளைஞர்கள், வாண வெடிகளை ஏவுவதற்குப் பயன்படுத்துகின்ற சிறிய மோட்டார்கள் மூலம் பொலிஸாரை நோக்கி வெடிகளை ஏவித் தாக்கி வருகின்றனர்.

பொலிஸாருக்கு எதிரான வன்முறைகளில் முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்ற இந்த வாண வெடிகளைப் பல நகர சபைகள் தடைசெய்துள்ளன.

இதேவேளை, நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற கலவரங்களின் போது சுமார் 421 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்ட பொலிஸார் மற்றும் கலகம் அடக்கும் படைவீரர்கள் காயமடைந்துள்ளனர். இந்த வார இறுதி நாட்களில் வன்செயல்கள் மேலும் தீவிரமடையலாம் என்று ரகசிய சேவைகள் எச்சரிக்கை செய்துள்ளன. (அ)

# ஒரே இரவில் தென்கொரியர்களுக்கு வயது குறைந்த சுவாரஷ்ய பின்னணி

சியோல், ஜூலை 01

தென் கொரியா இயற்றியுள்ள புதிய சட்டத்தினால் வயதை கணக்கிடும் பாரம்பரிய முறைகள் கைவிடப்பட்டு சர்வதேச நடைமுறை அமுலுக்கு வருகிறது. இந்த அறிவிப்பு தென் கொரியர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.


தென் கொரியாவில் வயதின் கணக்கீடு என்பது பிற நாடுகளிலிருந்து வேறுபடுகிறது. அவர்கள் வயதை கணக்கிட 2 முறையை பின்பற்றுகிறார்கள். அதாவது ஓர் குழந்தை பிறக்கும் போதே அது ஒரு வயதுடன் பிறப்பதாக அவர்கள் நிர்ணயிக்கின்றனர். அதாவது தாயின் கர்ப்பப் பையில் இருக்கும் போதே குழந்தையின் வயது எண்ணிக்கை தொடங்குகிறது.

இரண்டாவது முறை அந்நாட்டில் பிறந்த நாள் திகதியில் தான் ஒருவரின் வயது கூடுதல் பெறுகிறது என்றில்லை. ஜனவரி முதலாம் திகதியை அவர்கள் கடக்கும்போதே அவர்களுக்கு ஒரு வயது கூடி விடுகிறது. வயது கூடுவதில் பிறந்த திகதி கணக்கில் கொள்ளப்படாது.

இந்த நிலையில் இந்த முறைகளை நீக்கி தற்போது சர்வதேச அளவிலான வயது கணக்கீட்டு முறையை தென்கொரியா ஏற்றுக் கொண்டுள்ளது.

தென் கொரியா பின்பற்றிய இந்த முறையால் ஒருவகையில் கொரியர்களுக்கு பொருளாதாரம், வேலை வாய்ப்பு சார்ந்த இழப்பீடுகளும், குழப்பங்களும் ஏற்படுவதாக அரசியல் கட்சிகள் தொடர்ந்து விமர்சனங்கள் எழுப்பி வந்தன.

இந்த நிலையில் யூன் சுக் யோல்ட் தலைமையிலான அரசு இந்த மாற்றத்தை கொண்டுள்ளது. அதன்படி இனி பிறந்த நாள் அன்றே அனைவருக்கும் வயது அதிகரிக்கும். புதிய முறையை சுமார் 70 வீத தென்கொரிய மக்கள் இந்த மாற்றத்தை வரவேற்றுள்ளனர். (அ)




# பிரபல பாடகி மடோனா தீவிர சிகிச்சைப் பிரிவில்

நியூயோர்க், ஜூலை 01

உலகப் புகழ் பெற்ற பொப் இசைப் பாடகி மடோனா உடல் நலக்குறைவு காரணமாக வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

64 வயதான மடோனாவுக்கு கடந்த சில நாட்களுக்கு முன்னர் நோய்த்தொற்று ஏற்பட்டதையடுத்து அவர் கடந்த சனிக்கிழமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து அவருக்கு சுவாச சீராக்க சிகிச்சை வழங்கப்பட்டது. இந்நிலையில் அவர் தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.



கனடாவின் வன்கூவர் நகரில், "செலிப்ரேஷன் டூர்" என்ற பெயரில் எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி வரை மடோனா ஓர் உலக சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருந்த நிலையில் அப் பயணம் தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இஸ்ரேலிய சிறைச்சாலையில் அதிகரிக்கும் விந்தணு கடத்தல்

ஜெருசலேம், ஜூலை 01

இஸ்ரேலின் ரேமன் சிறைச்சாலையில் இருந்து பலஸ்தீனியர் ஒருவர் பலஸ்தீனிய கைதியின் விந்தணுக்களைப் போத்தல் ஒன்றில் அடைத்து கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய இருவரையும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக இஸ்ரேலில் உள்ள பலஸ்தீனிய சிறைக் கைதிகளின் விந்தணுக்கள் கடத்திச் செல்லப்பட்டு பலஸ்தீனத்தில் உள்ள அவர்களது மனைவிகளிடம் ஒப்படைக்கப்பட்டு ஐ.வி.எவ். எனப்படும் சிகிச்சை முறை மூலம் அவர்களைக் கர்ப்பமடையவைக்கும் செயல்பாடு இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இம்முறை மூலம் இதுவரை 100 குழந்தைகள் பிறந்துள்ளதாகவும் இதற்கு பலஸ்தீன மத குருக்கள் அனுமதி அளித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பலஸ்தீனத்தில் இது குறித்த சிகிச்சைகளை அளிப்பதற்காக பல மருத்துவ முகாம்கள் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை மூலம் 2012ஆம் ஆண்டு முதன்முறையாக பலஸ்தீனியக் குழந்தையொன்று பிறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பசியால் வாடும் பிரிட்டன் மக்கள்

லண்டன். ஜூலை 01

பிரித்தானியாவில் பணவீக்கம் அதிகரித்துள்ள நிலையில் 11.3 மில்லியன் மக்கள் பசியால் தவித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ட்ரஸ்ஸல் டிரஸ்ட்" என்ற உணவு வங்கித் தொண்டு நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.



வாழ்க்கைச் செலவுகள் உயர்வடைந்தமையே இதற்கான காரணமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரிட்டனின் பொருளாதாரம் உலகில் 6ஆவது இடத்தில் உள்ள போதிலும், கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக அதிகரித்து வரும் பணவீக்கம், தொழிலாளர்களின் ஊதிய உயர்வை விட மிக அதிகமாக உள்ளதால், அனைத்து தொழிலாளர்களுமே மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த அறிக்கையின்படி பிரிட்டனில் 7 பேரில் ஒருவர், உணவு வாங்கப் போதிய பணமில்லாமல் தவித்து வருவதாகவும், மாக உள்ளதால், அனைத்து தொழிலாளர்களுமே மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு



## ஆஷஷ் டெஸ்ட் தொடர்:

# ஆஸி. 416 ஓட்டங்கள் இங்கிலாந்து 278/04



லோர்ட்ஸ், ஜூலை 01

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் 2ஆவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 416 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தது. நட்சத்திர வீரரான ஸ்ரீவ் ஸ்மித் சதம் விளாசினார்.

இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல் நாள் போட்டியில் 83 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 339 ஓட்டங்கள் குவித்தது.

உஸ்மான் கவாஜா 17, டேவிட் வோர்ணர் 66, மோர்னஷ் லபுஷன் 47, டிராவிஸ் ஹெட் 77, கமரூன் கிறீன் 0 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஸ்ரீவ் ஸ்மித் 85, அலெக்ஸ் கேரி 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 2ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய அவுஸ்திரேலிய அணி 100.4 ஓவர்களில் 416 ஓட்டங்கள் குவித்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அலெக்ஸ் ஹேரி 22 ஓட்டங்களில் ஸ்டுவர்ட் பிரொட் பந்தில் எல். பி. டபிள்யூ. ஆனார். மிட்செல் ஸ்ரார்க் 6 ஓட்டங்களில் அண்டர்சன் பந்தில் வெளியேறினார். தனது 32ஆவது சதத்தை விளாசிய ஸ்ரீவ் ஸ்மித் 184 பந்துகளில், 15 பௌண்ட்ரிகளுடன் 110 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜோஷ் டங் பந்தில் கல்லி திசையில் நின்ற பென் டக்கெட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

நதன் லயன் 7, ஜோஸ் ஹசில்வூட் 4 ஓட்டங்களில் ஒல்லி றொபின்சனின் பந்தில் வெளியேறினர்.

அவுஸ்திரேலிய அணி தனது கடைசி 7 விக்கெட்களை 100 ஓட்டங்களுக்கு தாரை வார்த்தது. அணித் தலைவர் பட் கம்மின்ஸ் 22 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

அவுஸ்திரேலிய அணி 500 ஓட்டங்களுக்கு மேல் குவிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயல்பட்டு கட்டுப்படுத்தினர். ஜோஷ் டங், ஒல்லி றொபின்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

ஜோ ரூட் 2 விக்கெட்களையும் அண்டர்சன், ஸ்ருவர்ட் பிரொட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இதையடுத்து துடுப்பாட்டத்தைத் தொடங்கிய இங்கிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 4 விக்கெட்கள் இழப்புக்கு 278 ஓட்டங்கள் எடுத்துள்ளது. 138 ஓட்டங்கள் பின்தங்கி உள்ளது இங்கிலாந்து.

தொடக்க வீரரான ஸாக் கிராவ்லி 48 பந்துகளில், 5 பௌண்ட்ரிகளுடன் 48 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நதன் லயன் பந்தில் ஸ்ரொம்ப் ஆனார். ஒல்லி போப் 63 பந்துகளில் 42 ஓட்டங்கள் எடுத்து கிறீன் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பென் டக்கெட், 134 பந்துகளில் 98 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஹசல்வூட் அவரின் விக்கெட்டை கைப்பற்றினார். ரூட், 10 ஓட்டங்களில் ஸ்ரார்க் பந்துவீச்சில் வெளியேறினார். ப்ரூக் 45 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் ஸ்டோக்ஸ் 17 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ஐ)

## மூன்று அணிகளின் ஆதிக்கம் கிரிக்கெட்டையே அழித்துவிடும்



லண்டன், ஜூலை 01

இந்தியா, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய மூன்று அணிகள் அதிகளவில் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவது இறுதியில் அந்த கிரிக்கெட்டையே அழித்துவிடும் என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வீரர் கிறிஸ் கெயில் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் போன்ற சிறிய அணிகள் சிறப்பாக விளையாடுவதற்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பெரிய அணிகளுக்கு கொடுப்பதுபோல் அதிகளவில் ஊதியம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மூத்த வீரர்களுக்கான கிரிக்கெட் போட்டி நடைபெறும் நிகழ்வில் கலந்து கொண்ட அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், இத்தனை ஆண்டுகளில் கிரிக்கெட் சிறிது மாறிவிட்டது. கிரிக்கெட் தற்போது மிகப் பெரிய தொழிலாக உருவெடுத்துள்ளது. இருபது - 20 போட்டிகளில் மட்டுமல்லாது டெஸ்ட் போட்டிகளுக்கும் அதிக அளவிலான பணம் செலவிடப்படுகிறது. சிறிய அணிகளை காட்டிலும் பெரிய அணிகளுக்கு அதிக அளவிலான ஊதியம் வழங்கப்படுகிறது.

இதனால், சிறிய அணிகள் பாதிக்கப்படுகின்றன. இந்தக் குறைகளை களைய சரியான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் அனைவரும் பயனடைவர். சிறிய அணிகள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள அதிக அளவிலான போட்டிகளில் விளையாட வேண்டியுள்ளது. பெரிய அணிகளில் உள்ள வீரர்களுக்கு உள்ள சிறப்பான உள்கட்டமைப்பு வசதிகள் சிறிய அணிகளுக்கும் கிடைக்க வேண்டும்.

பெரிய அணிகளில் உள்ள வீரர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தைப் போன்று மற்ற அணி வீரர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் சில பெரிய அணிகள் மட்டுமே கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தும். அதில் அர்த்தமே இல்லை. அது விளையாட்டை அழித்துவிடும் - என்றார்.

## இந்திய அணியின் தலைவராக ஷிகர் தவான் நியமிக்கப்படலாம்




புதுடில்லி, ஜூலை 01

2023ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணியின் தலைவராக ஷிகர் தவானும் பயிற்றுநராக முன்னாள் இந்திய வீரர் வி. வி. எஸ். லட்சுமணன் வழிநடத்த வாய்ப்புள்ளது. இருப்பினும், முடிவு இறுதி செய்யப்படவில்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

2023ஆம் ஆண்டு சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு முதன்முறையாக ஆண் கள் மற்றும் பெண்கள் அணிகளை அனுப்ப இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி. சி. சி. ஐ.) ஒப்புக்கொண்டது.

தவான் தவிர, இந்தியாவின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் வி. வி. எஸ். லக்ஷ்மனும் இந்த போட்டிக்கான தலைமை பயிற்றுநராக இந்திய அணியில் சேரலாம். ஆசிய விளையாட்டுகள் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி.) கீழ் வராது மற்றும் சர்வதேச கிரிக்கெட்டில் அங்கீகரிக்கப்படாது.

ஆசிய கோப்பை மற்றும் ஐ. சி. சி. ஆண்கள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெறும் திகதிகளில் ஆசிய விளையாட்டுகள் நடக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவால் ஒக்ரோபர் 5 முதல் நவம்பர் 23 வரை நடத்தப்படும். ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023 சீனாவின் ஹாங்சோவில் செப்டம்பர் 23 முதல் அக்டோபர் 8 வரை நடைபெறும்.

# உலகக் கிண்ண தகுதிசுற்று; சிம்பாப்வே அணி வெற்றி!

புலவாயோ, ஜூலை 01

உலகக் கிண்ண தகுதி சுற்றின் சுப்பர் 6 போட்டிகளில் ஓமன் அணியை 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது சிம்பாப்வே அணி.

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதி சுற்று போட்டிகள் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது.

இதன் சுப்பர் 6 சுற்றில் நேற்று முன்தினம் புலவாயோ நகரில் சிம்பாப்வே - ஓமன் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணியானது 7 விக்கெட்கள் இழப்புக்கு 332 ஓட்டங்கள் குவித்தது.

சீன் வில்லியம்ஸ் 103 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 14 பௌண்ட்ரிகளுடன் 142 ஓட்டங்கள் விளாசினார். இந்தத் தொடரில் அவர், அடித்த 3ஆவது சதமாக இது அமைந்தது.

சிகந்தர் ரசா 42, லூக் ஜாங்வி 43, கிரெய்க் எர்வின் 25, வெஸ்லி மாதவரே 25, ஜாய்லார்ட் கும்பி 21 ஓட்டங்கள் சேர்த்தனர்.

ஓமன் அணி தரப்பில் பயாஸ் பட் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

333 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஓமன் அணி ஒரு கட்டத்தில் 46 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 280 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

தொடக்க வீரரான காஷ்யப் பிரஜாபதி 97 பந்துகளில், ஒரு சிக்ஸர், 12 பௌண்ட்ரிகளுடன் 103 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழந்தார். ஜதிந்தர் சிங் 2, அகிப் இல்யாஸ் 45, ஜீஷான் மக்சூத் 23, அயன் கான் 47, ஷோயிப் கான் 11, நசீம் குஷி 12, கலீமுல்லா 1 ரன்னில் ஆட்டமிழந்தனர்.



கடைசி 4 ஓவர்களில் வெற்றிக்கு 53 ஓட்டங்கள் தேவையாக இருந்த நிலையில் மொகமது நதீம், பயாஸ் பட் களத்தில் இருந்தனர். முசரபானி வீசிய 47ஆவது ஓவரில் 14 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டது.

சதரா வீசிய அடுத்த ஓவரில் பயாஸ் பட் (10) ஆட்டமிழந்தார். இந்த ஓவரில் 7 ஓட்டங்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றது. 49ஆவது ஓவரை வீசிய ரிச்சர்டு கரவா 3 ஓட்டங்கள் மட்டுமே வழங்க ஓமன்அணிக்கு நெருக்கடி அதிகரித்தது. சதரா வீசிய கடைசி ஓவரில் வெற்றிக்கு 29 ஓட்டங்கள் தேவையாக இருந்த நிலையில் முதல் 5 பந்துகளில் 14 ஓட்டங்கள் சேர்க்கப்பட்ட நிலையில் கடைசி பந்தில் மக்சூத் (37) ஆட்டமிழந்தார்.

முடிவில் ஓமன் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 318 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது. 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி 2 புள்ளிகளை பெற்றது.

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு விடயத்தில் மத்திய வங்கி ஆளுநரை நம்பவில்லை!

## வாசுதேவ நாணயக்கார எம். பி.

சர்வதேச நாணய நிதியம் நாட்டை ஆட்சி செய்கிறது. எவருக்கும் பாதிப்பு ஏற்படாது என்றால் ஏன் தேசிய கடன்களை மறுசீரமைக்க வேண்டும். மத்திய வங்கி ஆளுநர் மீது நம்பிக்கையில்லை. ஆகவே, கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கணக்காளர் நாயகம் பாராளுமன்றத்துக்கு உண்மையை அறிவிக்க வேண்டும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மருதானையில் உள்ள இடதுசாரி ஜனநாயக முன்னணியின் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமையவே ஜனாதிபதி செயற்படுகிறார். கடுமையான நிபந்தனைகள் ஒட்டுமொத்த மக்களுக்கும் சாபமாக மாறியுள்ளது. சர்வதேச நாணய நிதியமே நாட்டை தற்போது ஆட்சி செய்கிறது. தேசிய தொழில்துறையை மேம்படுத்த எந்த திட்டத்தையும் அரசாங்கம் இதுவரை முன்வைக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவாதத்தை கொண்டு எவரிடமிருந்து கடன் பெறலாம் என்பது குறித்து மாத்திரமே அவதானம் செலுத்தப்படுகிறது. தேசிய கடன்களை மறுசீரமைப்பதால் வங்கி கட்டமைப்பு, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றால் எவருக்கும் பாதிப்பு ஏற்படாது என்று ஜனாதிபதி, மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் குறிப்பிடுகிறார்கள். எவருக்கும் பாதிப்பு ஏற்படாது என்றால் ஏன் தேசிய கடன்களை மறுசீரமைக்க வேண்டும்.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள சகல கடன்களும் தரவிறக்கம் செய்யப்படும் அதனை தொடர்ந்து புதிய பிணைமுறிகள் வழங்கப்படும் என மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிடுகிறார். பிணைமுறிகளை புதிதாக விநியோகிக்க வேண்டுமாயின் நேரடி வட்டி வீதம் அதிகரிக்கப்பட வேண்டும். மீண்டும் வரி வீதம் அதிகரிக்கப்பட்டால் சமூக கட்டமைப்பில் ஒரு போதும் அமைதி நிலவாது.

நாட்டு மக்களின் உழைப்பை சூறையாடும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை உறுதிப்படுத்தும் தேசிய கடன் மறுசீரமைப்பு செயல்திட்டத்துக்கு எதிராக வாக்களிப்போம் - என்றார். (ஐ)

# கனடாவை தாக்கிய இந்தியா இலங்கை ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 01

கனடா வாக்குவங்கி அரசியலை முன்னெடுக்கின்றது என்று இந்தியா வெளியிட்ட கருத்தை இலங்கை ஆதரித்துள்ளது.

காலிஸ்தான் விவகாரத்தை கனடா வாக்குவாங்கி அரசியலை அடிப்படையாக வைத்து முன்னெடுக்கின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கனடாவில் சமீபத்தில் காலிஸ்தான் ஆதரவாளர்களின் செயல்பாடுகள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் சமூக ஊடகமொன்றில் வெளியான காணொலியில் இந்திய வெளிவிவகார அமைச்சர், கனடா வாக்குவங்கி அரசியலை நோக்கமாக கொண்டு செயல்படுகின்றது போல தோன்றுகிறது என்று தெரிவித்துள்ளார்.

இதனை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி ஆமோதித்து தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், "வாக்குவங்கி அரசியல் வேறு என்ன?" என்றும் அலிசப்ரி கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ)

# 53 கல்வி நிலையங்களுக்கு கிளிநொச்சியில் பதிவு இல்லை!

கிளிநொச்சி, ஜூலை 01

கிளிநொச்சி மாவட்ட தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளுடனான விசேட கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில், கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் 113 தனியார் கல்விநிலைய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதன்போது, பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில், மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், கல்வி நிலையங்களின் நிர்வாகிகள், பொலிஸார், சுகாதார உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் கல்வி நிலையங்களில் 63 கல்வி நிலையங்கள் பிரதேச சபைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதுடன், 53 கல்வி நிலையங்கள் பதிவு செய்யப்படாது இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு கோப் குழுவும் ஆதரவளித்தது

கொழும்பு, ஜூலை 01

அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு கோப் குழு அனுமதி அளித்துள்ளது.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள பிரேரணைகளை பரிசீலிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழு இரண்டு நாட்கள் கூடியது.

நீண்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்ற பின்னர் கோப் குழு ஆவணங்களை அங்கீகரித்துள்ளது.

இதன்படி, அரசாங்கத்தின் உள்நாட்டு கடனை மேம்படுத்தும் திட்டம் இன்று சனிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.

கடன் மறுசீரமைப்பு திட்டம் குறித்து விவாதம் செய்வதற்காக பாராளுமன்றம் காலை 9.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை விசேட அமர்வை நடத்த உள்ளது.

இந்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்றிரவு 7.30 மணிக்கு பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

பாராளுமன்ற அலுவல் குழு கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது. (ஐ)

# பணவீக்கம் குறைவடைந்தது

கொழும்பு, ஜூலை 01

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இந்த வருட ஜூன் மாதத்தில், கொழும்பு நகரின் பணவீக்கமானது 12 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

கடந்த மே மாதம் பணவீக்கம் 25.2 சதவீதமாக நிலவியது. அத்துடன், மே மாதத்தில் உணவு பணவீக்கமானது 21.5 சதவீதமாக நிலவியது.

எனினும், ஜூன் மாதத்தில் உணவு பணவீக்கமானது 4.1சதவீதமாக குறைவடைந்து. இதேவேளை, உணவு அல்லாத பணவீக்கம் ஜூன் மாதத்தில் 27 சதவீதத்திலிருந்து 16.2 சதவீதமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் ஆளுநர் சபை உறுப்பினராக சிறிசற்குணராஜா!

கொழும்பு, ஜூலை 01

கல்வி அமைச்சின் திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவின் கீழ் நிர்வகிக்கப்படும் ஆர்தர் சி கிளார்க் நவீன தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆளுநர் சபை உறுப்பினர்களில் ஒருவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்தவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 1994ஆம் ஆண்டின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ், உடனடியாகச் செயல்படும் வகையில் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# வாள்வெட்டில் ஒருவர் படுகாயம் மூன்று பேர் வவுனியாவில் கைது

வவுனியா, ஜூலை 01

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த செல்வம் தவேந்திரன் (வயது 46) என்பவரே காயமடைந்தார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதிக்கு ஜீப் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றில் வந்த குழுவினர் அந்தப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மீது வாளால் வெட்டி விட்டு தப்பிச் செல்ல முயன்றுள்ளனர்.

இதன்போது, கிராம மக்கள் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கிய போதும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவில்லை என பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனையடுத்து, கிராம மக்கள் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கியதையடுத்து அங்கு வந்த விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மூன்று பேரை கைது செய்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அத்துடன், தாக்குதலில் ஈடுபட்டவர்களின் ஜீப் வண்டியும் மீட்கப்பட்டதுடன், அதில் இருந்து இரு வாள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

காயமடைந்தவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அஸ்வெசும திட்டம்; ஒன்லைன் மூலம் மேன்முறையீடுகள்

வவுனியா, ஜூலை 01

அஸ்வெசும திட்டத்தில் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கான மேன்முறையீடுகள், ஆட்சேபனைகள் என்பன ஒன்லைன் மூலம் வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பதிவு செய்யப்பட்டன.

வவுனியா மாவட்டத்தின் தோணிக்கல், கூமாங்குளம், மூன்றுமுறிப்பு, வெளிக்குளம், கோவில்குளம் ஆகிய ஐந்து கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்களின் மேன்முறையீடுகளும் ஆட்சேபனைகளும் நேற்றுப் பதிவு செய்யப்பட்டன.

இதன்போது, 300க்கும் மேற்பட்ட பயனாளிகள் தமது முறையீடுகளை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஈ. பி. எவ்., ஈ. ரி. எவ். வழங்க உறுதி

கொழும்பு, ஜூலை 01

அரச பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழ் பணிபுரியும் தோட்ட தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் (ஈ. பி. எவ்), ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஈ. ரி.எவ்.) ஆகியவற்றை விரைவில் வழங்குவதற்கான விசேட அமைச்சரவை பத்திரமொன்று முன்வைக்கப்படும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸிடம் உறுதியளித்துள்ளார் அமைச்சர் ரமேஷ் பத்திரண.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும், அரச பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் அவரது அமைச்சில் நடைபெற்றது.

அரச பெருந்தோட்ட நிறுவனங்களில் பணியாற்றிய தோட்ட தொழிலாளர்களில் பலருக்கு 2002 ஆம் முதல் ஈ.பி.எவ், ஈ. ரி. எவ் என்பன செலுத்தப்படாமல் உள்ளன. இவ்வாறு நிலுவையில் உள்ள தொகை செலுத்தப்பட வேண்டும் என இ.தொ.கா.வின் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்து விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை முன்வைத்து தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ரமேஷ் பத்திரண உறுதியளித்துள்ளார்.

அத்துடன், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வீடமைப்பு திட்டத்துக்கு 10 பேர்ச் காணி, தேயிலை மீள் பயிரிடல் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## மீள்குடியேற்றப்படா...

சம்பந்தமான பிரச்னைகள் நீண்ட காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. நான் காணிப் பெறுமதியை மிக நன்றாக அறிந்தவன்.

இவை தொடர்பில் ஜனாதிபதியாக இருக்க முன்பும் ஜனாதிபதியாக இருந்த போதும் அது சம்பந்தமான போதிய விடயங்கள் தெரியும்.

ஜனாதிபதியான பின்னர் யாழ்ப்பாணம் வந்தபோது மீள்குடியேற்றப்பட்ட மக்களின் பிரச்னைகள் , நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களின் பிரச்னைகளை நேரடியாகக் கேட்டறிந்தவன்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு இலங்கை மற்றும் இந்திய அரசுகளின் உதவியுடன் வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள ஆலயங்களுக்கும் பாடசாலைகளுக்கும் செல்லமுடியாத நிலையை உங்கள் மூலமாகவும் ஏற்கனவே அறிந்துள்ளேன்.

உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் உரித்தான காணிகள் யுத்தத்தின் மூலமும் வேறு காரணங்கள் மூலமும் கிடைக்காமல் போகும் விடயம் மனதுக்கு வேதனை தரக்கூடிய விடயமாகும்.

பிரதேச செயலாளர் விடுவிக்கப்பட்ட காணிகள் மற்றும் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பான விடயங்களைச் சமர்ப்பித்திருந்தார். அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட குழுவினருடன் அப் பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிடக்கூடியதாக இருந்திருந்தால் இது தொடர்பான மேலதிக விடயங்களை அறிய முடிந்திருக்கும்.

ஆனால் நீங்கள் கூறிய கோயில்கள், பாடசாலைகளுக்கு ஜனாதிபதியாக இருந்திருந்தால் சென்றிருக்கலாம். இப்போது நானும்கூட மேலதிக அனுமதி பெற்றுச் செல்லவேண்டிய நிலையுள்ளது.

நீங்கள் மறக்கவேண்டாம். நாங்கள் ஆட்சியிலுள்ள அரசாங்கமில்லை. எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்கள்.

எமக்குச் செய்யக்கூடிய வேலைகள் மிகக் குறைவானவையே.

இவ் மீள் குடியேற்றம் தொடர்பான விடயங்களை நானும் ஏனைய எமது பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் கதைக்க முடியும். நான் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் தற்போது வருகை தந்தபோது கூறிய பிரச்னைகள் தொடர்பாக தற்போதைய ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவிக்கவுள்ளதுடன் பாராளுமன்றத்துக்கு நேரடியாக எடுத்துக் கூறவுள்ளேன்.

வடபகுதியிலும் கிழக்கு மாகாணத்திலும் நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான் அதிகளவான காணிகள் விடுவிக்கப்பட்டன. இப் பிரச்னைகள் தொடர்பில் எனக்கோ அங்கஜனுக்கோ விளங்கவில்லையென நீங்கள் கூறக்கூடாது.

இது தொடர்பான தீர்மானமெடுக்கும் சக்தி அரசாங்கத்திற்கே உண்டு. நீங்கள் தெரிவித்த கோரிக்கைகள் மற்றும் கடிதங்களை நாங்களும் அரசாங்கத்திடம் கோரிக்கைகளாக முன்வைக்கவுள்ளோம்.

வருகின்ற காலங்களில் இப் பிரச்னை தொடர்பான உங்கள் கோரிக்கைகளை கடிதம் மூலம் உரிய தரப்பினருக்கு அறிவித்து பிரச்னைகளுக்குத் தீர்வு காண முற்றுமுழுதாக முயற்சிப்போம்- என்றார். (அ)

## மின்சார...

ரூபாயிருந்து 10 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

மாதாந்த நிலுவைக் கட்டணம் 400 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

60 அலகுகளுக்கு குறைவான பிரிவில், ஒரு அலகுக்கான கட்டணம் 42ரூபாயில் இருந்து 32 ரூபாயாகவும், மாதாந்த நிலுவைக் கட்டணம் ரூபாய் 650இல் இருந்து 300 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

91 மற்றும் 120 அலகு பிரிவுகளுக்கு, ஓர் அலகு 42 ரூபாயிலிருந்து 35 ரூபாயாகவும், மாதாந்த நிலுவைக் கட்டணம் 1500 ரூபாயில் இருந்து 1,000 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மத வழிபாட்டுத் தலங்களுக்கு 16 சதவீதம் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. குறைந்த நுகர்வு கொண்ட வழிபாட்டுத் தலங்களுக்கு ஒரு அலகு 10 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது (30 ரூபாவிலிருந்து 10 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஹோட்டல் துறைக்கு 26.3 சதவீத கட்டணம் குறைப்பு, கைத்தொழில் துறைக்கு ஒன்பது சதவீத கட்டண குறைப்பு, வணிக கட்டிடங்களின் மின்சார கட்டணம் ஐந்து சதவீதம் குறைப்பு, அரச கட்டிடங்களின் மின்சார கட்டணம் ஒரு சதவீதத்தால் குறைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## புதிய பொலிஸ்மா...

தொடர்புடைய மிகவும் முக்கியமான பங்கு என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்."

-இவ்வாறு கோரி கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அதில், தற்போதைய பொலிஸ் மா அதிபர் சந்தன டி. விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு ஜூன் 26 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பதவிக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்களில், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிதுந்த ஜயவர்த்தன மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் உள்ளனர் எனப் பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன பணிப்பாளராக கடமையாற்றியபோதே ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இத்தாக்குதலில் கத்தோலிக்க திருச்சபை மற்றும் ஏனைய சமூகங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான அப்பாவி மக்கள் உயிர்களையும் அவயவங்களையும் இழந்தனர்.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் கவனத்தில் கொள்ளவேண்டும் - என சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## சீனா இலங்கையின்...

இலங்கையின் முன்னேற்றத்தில் சீனா நம்பகமான நண்பராகவும், பங்காளியாகவும் இருந்து வருகிறது என்றும், தொடர்ந்தும் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பீஜிங்கில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

சீனாவுடனான நாட்டின் உறவு மற்றும் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு அது எவ்வாறு உதவியது என்றும் குறிப்பிட்டார்.

சீனாவின் பெல்ட் அண்ட் ரோட் முன்முயற்சி இலங்கையை கடன் பொறிக்குள் தள்ளியுள்ளது என்ற மேற்கத்திய ஊடக அறிக்கையை முற்றாக நிராகரிப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறினார்.

இலங்கையின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் சீன முதலீடு மிகவும் முக்கியமானது எனவும் வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரம் தற்போது ஸ்திரமடைந்து வருவதாகவும், இந்த சந்தர்ப்பத்தில் சீனாவின் முதலீடு மிகவும் முக்கியமானது என்றும் அவர் கூறினார்.

# இராணுவ கப்டன் உட்பட இருவர் மூன்று துப்பாக்கிகளுடன் கைது!

கொழும்பு, ஜூலை 01

மினுவாங்கொடை பிரதேசத்தில் சிறைச் சாலை கண்காணிப்பாளரின் வீட்டுக் குச் சென்று துப்பாக்கியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த இராணுவ கப்டன் உட்பட இரண்டு பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து ஒரு ரி-56 ரக துப்பாக்கி, இரண்டு கைத்துப்பாக்கிகள் ஆகிய வற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொலை மற்றும் திட்ட மிட்ட குற்றச் செயல் கள் தொடர்பான விசாரணைப் பிரிவினர் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

நுவரெலியா கிறகரி வீதிக்கு அருகில் சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த நிலையில், இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

துப்பாக்கிகளுடன் சந்தேக நபர்களிடம் இருந்த ரி-56 தோட்டக்களுக்கான ரவைக் கூடு மற்றும் கைத்துப்பாக்கிக் கான ரவைக்கூடு களுடன் 167 தோட்டக்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

மினுவாங்கொடையில் சிறைச்சாலைக் கண் காணிப்பாளரை தாக்கியமை சம்பந்தமாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்டபோது, சந்தேக நபர் நுவரெலியா வில் மறைந்திருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 39 வயதான பிரதான சந்தேக நபர் அத்துருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் இந்த நபருடன் மூன்று நாட்கள் தங்கியிருந்த இரா ணுவ கப்டன் இரத்தினபுரியில் உள்ள முகாம் ஒன்றில் கடமை யாற்றி வருபவர் எனவும் பொலிஸார் கூறினர்.

கைப்பற்றிய ரி-56 ரக துப்பாக்கி, ஹோமா கமை, நியந்தகல ஆகிய பிரதேசங்களில் நடந்த கொலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி என தெரியவந்துள்ளது. (அ)

# நீர் சறுக்கலுக்கு எதிராக பேரணி



மட்டக்களப்பு, ஜூலை 01

சுற்றுலாத்துறைக்கு புகழ் பெற்ற பிரதேசமான பொத்துவில் அறுகம்பை பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் நீர் சறுக்கல் படகு களை ஏற்றிச் செல்வதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

அறுகம்பை ஆட்டோ உரிமையாளர்கள் சங்கத்தினால் இடம் பெற்ற குறித்த ஆர்ப்பாட்டம் அறுகம்பை பிரதான வீதியில் ஆரம் பிக்கப்பட்டு, பேரணியாக பொத்துவில் பிரதேச செயலகம் வரை சென்றது. (அ)

## எதிரணிகள்...

விக்கிரமசிங்க தலைமையில் கடந்த 28 ஆம் திகதி கூடிய விசேட அமைச்சரவைக் கூட்டத்தில், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இது தொடர்பான யோசனை பாராளுமன்ற நிதிக்குழுவிலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

நிதிக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றதை அடுத்து இன்று சனிக்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்படும்.

பாராளுமன்றத்தில் நடைபெறும் வாக்கெடுப்பின்போதே அதற்கு எதிராக வாக்களிப்பதற்கு எதிரணிகள் தீர்மானித்துள்ளன. (அ)

## மாவையை...

சிறிசேனவின பல்வேறு தரப்புகளையும் சந்தித்து கலந்துரையாடி வருகிறார்.

நேற்று மாலை வலி.வடக்குப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளில் கலந்துகொண்டதன் பின்னர் மாவட்டபுரத்தில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் இல்லத்துக்கும் அமைத்திரிபால சென்று அவரைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன, சுதந்திரக் கட்சியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த சமீர, முன்னாள் ஜனாதிபதியின் புதல்வர் தஹாம் சிறிசேன ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## பெற்றோலின்..

நிர்ணயிக்கப்பட்டது.

சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 6 ரூபாயால் அதிகரித்து 346 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டீசல் ஒரு லீற்றரின் விலை 2 ரூபாயால் குறைந்து 308 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 9 ரூபாயால் குறைந்து 236 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழிலிருந்து...

இருந்து கொழும்பு நோக்கிப் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

பஸ்ஸில் தீப்பிடித்தபோது, 40 இற்கும் அதிக பயணிகள் அதில் இருந்தனர் எனவும், யாருக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு பஸ்ஸில் இருந்து பாதுகாப்பாக இறக்கப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் தீப்பிடித்ததில் ஒரு சில பயணிகளின் பொதிகள் மட்டுமே எரிந்ததாகக் கூறப்படுகிறது. தீ விபத்திற்கு முன்னர் புத்தளத்தை அண்மித்த பகுதியில் பயணிகள் தேநீர் அருந்துவதற்காக பஸ் வண்டியை நிறுத்தியபோது சாரதி பஸ்ஸை சோதனையிட்டபோதும் விபத்துக்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை என பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

பஸ் தீப்பிடித்ததையடுத்து, புத்தளம் நகர சபையின் தீயணைப்பு பிரிவு மற்றும் பாலாவி விமானப்படை தீயணைப்புப் பிரிவினர் வந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். ஆனால் அதற்குள் பஸ் முழுமையாக தீப்பிடித்து எரிந்தது.

சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# நடுநிலை அரசியலுக்கு மகிந்த இனி தலைமை தாங்கமுடியாது

## கூறுகிறார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு, ஜூலை 01

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இனிமேல் நடு நிலையான அரசியல் நிரோட்டத்துக்கு தலைமை தாங்கிப் பயணிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

குருவிட்ட பிரதேசத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இடதுசாரி நிலைப்பாடுகளைக் கொண்டிருந்த மகிந்த ராஜபக்ஷ, நடுநிலையான அரசியல் நீரோட்டத்தில் பயணித்தார். அரச அடக்குமுறை, ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து போராட்டங்களை நடத்தினார்.

ஆனால், வலதுசாரி தாராளமய அரசியல் நிலைப்பாடுகளை கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் மடியில் மகிந்த ராஜபக்ஷ தற்போது அமர்ந்துள்ளார். இதன் காரணமாக அவர் நடுநிலையான கொடியை ஏந்திச் செல்ல முடியாது - என்றார். (அ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்றுக் கிளிநொச்சியில் போராட்டம்




கிளிநொச்சி, ஜூலை 01

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது அலுவலகம் முன்பாக ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

2383ஆவது நாளாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவரும் உறவுகள் ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# வவுனியா நோக்கி பிக்குகள் யாத்திரை



வவுனியா, ஜூலை 01

ருவென்வெலிசாய விகாரையில் இருந்து வவுனியாவில் உள்ள விகாரை நோக்கி பௌத்த தேரர்கள் பாத யாத்திரை ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

அனுராதபுரத்தில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க ருவென்வெலிசாய விகாரையில் கடந்த 28 ஆம் திகதி கல்காமு சாந்தபோதி பௌத்த பிக்கு தலைமையில் ஆரம்பமான குறித்த பாதயாத்திரையானது நேற்றுக் காலை வவுனியா கண்டி வீதியில் உள்ள விகாரையை வந்தடைந்தது.

அங்கிருந்து வவுனியாவில் தமிழர் பகுதியைக் கையகப்படுத்தி குடியேற்றம் செய்யப்பட்ட காலபோகஸ்வேவ பகுதியில் உள்ள சபுமல்கஸ்கட விகாரையை சென்றடையவுள்ளது.

குறித்த பாத யாத்திரையில் 50 இற்கு மேற்பட்ட பௌத்த தேரர்கள், மறைந்த பௌத்த தேரர்களின் கேசம், பற்சின்னம் உள்ளிட்ட புனிதப் பொருட்களுடன் சென்று அதனை அங்கு பார்வைக்கு வைப்பதுடன், எதிர்வரும் போயா தினத்தன்று விசேட பூசை நிகழ்வை யும் அவர்கள் நடத்தவுள்ளனர். (அ)

# மனித எச்சங்கள் உள்ள பகுதியை பார்வையிட்டார் கஜேந்திரன் எம்.பி.



முல்லைத்தீவு, ஜூலை 01

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியில் பெண்களின் எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளதையடுத்து, அந்த இடத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சென்று பார்வையிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்-

1984ஆம் ஆண்டு கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி மக்கள் இராணுவத்தினாலும் அரச இயந்திரங்களாலும் வெளியேற்றப்பட்டனர்.

பின்னர் 2009ஆம் ஆண்டு வரை இந்த பகுதி முழுமையாக இராணுவ ஆக்கிரமிப்பில் காணப்பட்டுள்ளது.

மேலும், இந்த பகுதியில் பாரிய இராணுவ முகாம் ஒன்று காணப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இந்த இடத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது என்பது காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம். அல்லது போரில் உயிரோடு பிடிக்கப்பட்ட போராளிகள் புதைக்கப்பட்டதாக இருக்கலாம். இது தொடர்பான முழுமையான அகழ்வுப் பணி நடைபெறவேண்டும்.

இலங்கை அரசாங்கம் மேற்கொள்கின்ற அகழ்வுப் பணிகள் மூலமாக உண்மை மூடி மறைக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கின்றது. ஆகவே, இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் அக்கறை காட்டவேண்டும்.

சர்வதேச கண்காணிப்புடன் இவ்வாறான அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் ஊடாகத்தான் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கு வழியாக இருக்கும் - என்றார். (அ)



# பொதுநூலகம் சென்ற மைத்திரி

யாழ்ப்பாணம், ஜூலை 01

யாழ்ப்பாணத்திற்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு நேற்றுக் காலை 9.30 மணியளவில் விஜயமொன்றை மேற்கொண்டார்.

நூலகத்திலுள்ள அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்டதுடன், யாழ். மாநகரசபை ஆணையாளர் ஜெயசீலன் மற்றும் நூலக ஊழியர்களுடன் நூல் நிலைய நிலைமைகள் பற்றி கலந்துரையாடினார்.

இதன்போது யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன போன்றோர் கலந்துகொண்டனர். (அ)

# அரிசி விலையை குறைத்தது சதொச

கொழும்பு, ஜூலை 01

லங்கா சதொச நிறுவனம் 3 வகையான அரிசியின் விலையை நேற்று முதல் குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ வெள்ளை அரிசியின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 165 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ வெள்ளை நாட்டு அரிசி ஏழு ரூபாவினாலும், ஒரு கிலோ சிவப்பு அரிசி இரண்டு ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது.

அவற்றின் புதிய விலை முறையே 168 ரூபாயாகவும் 135 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ)

# மைத்திரிபாலவை சந்தித்தார் அனந்தி



யாழ்ப்பாணம், ஜூலை 01

யாழ்ப்பாணத்துக்கான விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதியும், சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவை வட மாகாண சபை மகளிர் விவகார மற்றும் சமூக சேவைகள் புனர்வாழ்வு கூட்டுறவு முன்னாள் அமைச்சரும், ஈழத்தமிழர் சுயாட்சிக் கழக தலைவியுமான அனந்தி சசிதரன் மரியாதை நிமித்தமாக சந்தித்து உரையாடினார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

வடமாகாண மகளிர் உரிமைகள், மனித உரிமைகளை பாதுகாத்தல், காணாமல்போனவர்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நிலை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன என தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்திப்பின்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் உடனிருந்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.